# அரசு ஊழியர்

ஆகஸ்ட் 2018

மலர் : 39 இதழ் : 8

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடாக ஒரு கோப்பை சூப்

## வீழ்வோமோ?

அவலத்தை நிதம்பாடி
அச்சத்தில் வீழ்வோமோ?
சவம்போல விரைத்தழுகி
சலனமின்றிக் கிடப்போமோ?
துவண்டுவிழ நியாயமில்லை
துக்கிக்க நேரமில்லை
உழைப்பு வீணும் அல்ல
உயிர் இருப்பு சாவுமல்ல

இருளென்று பாடுதற்கு
இங்கேதான் நாமெதற்கு?
இருகண்ணில் ஒளியிருக்க
இருள்கண்டு பயமெதற்கு?
ஒளியின் மகத்துவத்தை
உலகறியப் பாடிடுவோம்!
உயிரீந்தும் வெளிச்சத்தை
மனந்தோறும் பாய்ச்சிடுவோம்!

- ஆதவன் தீட்சண்யா

## "பொறுப்பான முதலமைச்சர் பதவிக்கு பொறுப்பற்ற பேச்சு நல்லதல்ல"

**ச**மீபத்தில் தமிழக முதலமைச்சர் தங்களது கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய பேச்சு குறித்து வாட்ஸ்-அப் செய்தியாக வெளிவந்துள்ளது. முதல்வரின் அவதூறான கண்ணியமற்ற பேச்சு கண்டனத்திற் குரியது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அரசின் அச்சாணி யாவார்கள். இதுவரை தமிழகத்தை ஆண்ட முதல்வர் களான ஓமந்தூரார், பக்தவச்சலம், காமராசர், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ராமச்சந்திரன், செல்வி. ஜெயலலிதா அம்மையார் போன்றவர்கள் எந்த நிலையிலும் கண்ணியமற்ற வகையில் அரசு ஊழியர் களையும், ஆசிரியர்களையும் பேசிய வரலாறு இல்லை. எல்லா காலகட்டங்களிலும் நாம் நடத்தாத போராட்டங்கள் இல்லை. நாம் நடத்தாத பேச்சு வார்த்தைகள் இல்லை. முதல்வரின் இத்தகைய ஆவணவமான பேச்சு அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும், ஏன் பொது மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்திய சுதந்திர வரலாற்றின் பின்னணி தெரியாத வரில்லை முதல்வர். ***அளப்பரிய தியாகத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சிம்மாசனத்தில் தான் அமர்ந் திருக்கிறோம்*** என்று எண்ணிப் பார்க்காமல் முதல்வர் பேசியது இந்தப் பதவிக்கு உகந்ததல்ல.

ஒரு மாநிலத்தின் சக்தி வாய்ந்த, அதிகார பலமிக்க பொறுப்புணர்வுமிக்க பதவி வகிக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இப்படி பேசியிருப்பது அந்த மாபெரும் பொறுப்பின் பெருமைக்கு இழுக்கை ஏற்படுத்தியுள்ளது. முதல்வர் அவர்களின் பேச்சு ஆசிரியர்கள், அரசு ஊழியர்களை இழிவுபடுத்தி விட்டது என்பதைவிட அவர் வகிக்கின்ற பொறுப்புக்கு களங்கத்தை ஏற்படுத்திவிட்டது என்றே சொல்லலாம்.

இதுவரை தமிழ்நாட்டின் முதலமைச்சர்களாக இருந்த மகத்தான மக்கள் செல்வாக்கு பெற்ற முன்னாள் முதல்வர்கள் யாரும் பேசித் தூண்டாத வார்த்தைகளை இன்றைய முதலமைச்சர் பயன் படுத்தி விட்டது இதுவரை தமிழ்நாட்டில் காணாத நிகழ்வாக அமைந்துவிட்டது. ஆசிரியர்-அரசு ஊழியர் பணியின் மேன்மையை களங்கப்படுத்தியுள்ளார்.

கடந்த ஊதியக்குழு நடைமுறைப்படுத்தப் பட்டதில் மாதம் நாற்பதாயிரம் ஊதிய உயர்வு பெற்ற ஒரு அரசு ஊழியர், ஆசிரியரையாவது ஆதாரத்துடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூற முடியுமா?

தவறான அறிக்கையினை வெளியிட்டு வேதனை படுத்திய மாண்புமிகு அமைச்சர் ஜெயக்குமார் அவர்களின் அறிக்கையை தொடர்ந்து முதலமைச்சர் இவ்வாறு பேசி வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சி யிருப்பது எவ்வாறு ஏற்புடையதாகும்? இதுபோன்று பொதுமக்களுக்கு தவறான தகவல்களை கூறுவதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வன்மையாக கண்டிக் கிறது. இத்தகைய கண்ணியமற்ற பேச்சுக்கு முதல்வர் தனது வருத்தத்தை தெரிவிப்பதுதான் பொறுப்பான முதல்வரின் பதவிக்கு அழகானதாகும். ❖

# ஒப்பந்த தொழிலாகும் அரசுத் துறைகள்! பறிபோகும் இளைஞர்களின் வேலைவாய்ப்புகள்!!



**த**மிழக அரசு ஊழியர்களுக்கான ஊதிய மாற்றம் தொர்பாக கடந்த அக்டோபர் மாதம் வெளியிடப்பட்ட தமிழக அரசின் செய்திக் குறிப்பில், (செய்தி வெளியீடு எண்.678, நாள் 11.10.2017) அரசின் வருவாய் இனச் செலவினங்களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து, அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும், இதரப் பணியிடங்களில் வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ பணி நியமனங்களை மேற்கொள்ள, தக்க பரிந்துரைகளை அளித்திட “பணியாளர் சீரமைப்புக் குழு'' (Staff Rationalization Committee) அமைக்கப்படும் என ஊதியமாற்றத்திற்கு தொடர்பற்ற செய்திஒன்றினையும் இணைத்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேற்படி அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசு ஆணை எண்.56, நிதித்(CMPC) துறை, நாள்.19.02.2018-ல், பணியாளர் சீரமைப்புக்குழுவினை ஓய்வு பெற்ற IAS அலுவலர் திரு.ஆதிசேஷய்யா தலைமையில் அமைத்தும் ஆணையிட்டுள்ளது.

இக்குழுவின் பிரதான நோக்கம், அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்களின் பணி நிலைமைகளை ஆராய்ந்து, நிரந்தரப் பணியிடங்களை குறைத்து, ஆண்டுதோறும் அரசின் திட்டங்களுக்கு அத்தியாவசியம் என கருதப்படும் பணியிடங்களில், தற்காலிக / ஒப்பந்த முறையிலான / தொகுப்பூதிய முறைகளில் ஊழியர்களை நியமித்துக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதே எனவும் மேற்படி அரசரணை கூறுகிறது.

இவ்வாண்டின் அரசின் நிதிநிலைக் குறிப்பிலேயே, தற்போது மாநில அரசின் கீழ் செயல்படும் துறைகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை (அதாவது காலிப் பணியிடங்களையும் சேர்த்து) 14,26,409 என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| தலைமைச் செயலகத்தில் | - | 9165 |
| 146 அரசுத் துறைகளில் | - | 10,33,826 |
| தமிழ்நாடு தேர்வாணையம் | - | 840 |
| உள்ளாட்சித் துறை ஊழியர்கள் | - | 99,586 |
| சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் | - | 2,82,470 |
| மேலே குறிப்பிடப்பட்ட 146 அரசுத் துறைகளில் குறிப்பாக | | |
| காவல் துறையில் | - | 1,44,480 |
| வருவாய்த் துறையில் | - | 61,320 |
| உள்ளாட்சித்துறையில் | - | 31,247 |
| கல்வித் துறையில் | - | 4,23,077 |
| மருத்துவத் துறையில் | - | 1,20,175 |

பணியிடங்கள் உள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. அதாவது 2018-ம் ஆண்டில் முன்மதிப்பீட்டின்படியான தமிழக மக்கள் தொகை 8 கோடியே 88 லட்சத்தில், 1000 மக்கள் தொகைக்கு 16 ஊழியர்கள் என்ற விகிதத்திலேயே பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதில், 3,00,000 பணியிடங்கள் காலியாக விடப்பட்டுள்ள நிலையில் 1000 மக்கள் தொகைக்கு 13 ஊழியர்கள் என்ற விகிதத்திலேயே தற்போது ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.




இந்நிலையில்தான், ஆண்டுக்காண்டு மக்களின் அத்தியாவசியத் தேவைகளை கருத்தில் கொள்ளாமல் வாக்கு வங்கியை கைப்பற்றும் நோக்கத்துடன் பல்வேறு இலவசத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, மேலும் மேலும் அரசு ஊழியர்களின் பணிச் சுமையை ஏற்றிக் கொண்டே வருவதுடன் இருக்கின்ற நிரந்தரப்

பணியிடங்களின் எண்ணிக்கையினையும் குறைத்து அத்துக்கூலியில், வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டுள்ள இளைஞர்களின் உழைப்பை அபகரிக்கும் கீழ்த்தர முயற்சியில் அரசே ஈடுபட முயற்சித்து வருகிறது.

### சுதந்திர இந்தியாவின் நோக்கம்

நாடு விடுதலை அடைந்தபோது, இந்தியாவில் வருவாய்த் துறை, மருத்துவம், காவல் உள்ளிட்ட ஒரு சில அரசுத் துறைகள் மட்டுமே இருந்தது. அடிப்படை உட்கட்டமைப்புகள், கனரக தொழில்கள் இல்லாததுடன் விவசாய உற்பத்தியில் தன்னிறைவு அடைய இயலாமல் பொருளாதாரம் மிக மோசமாகவும், மக்களின் கல்வி, வேலைவாய்ப்புகள் மிகவும் பின்தங்கிய நிலையிலும் இருந்தது. தேசத்தின் புனர்நிர்மாணத்திற்கான பணிகளில் உலகின் பல்வேறு நாடுகளின் உதவியை நேரு நாடினார். உலக வல்லாதிக்க நாடுகள் இந்தியாவிற்கு எந்த உதவியையும் அளிக்காத நிலையில், 1917-ம் ஆண்டு லெனின் தலைமையில் நடைபெற்ற ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சிக்குப் பிறகு அங்கு உருவான மக்கள் நல அரசு, ஏராளமான மக்கள் நலத்திட்டங்களை ஐந்தாண்டு திட்டங்கள் மூலம் வகுத்து நடைமுறைப்படுத்தி வந்ததை கண்ணுற்ற பண்டிட் நேரு, சோவியத் ஒன்றியத்தின் உதவியை நாடியதுடன் தேசத்தின் வளர்ச்சிக்கு சோவியத் ஒன்றியம் கையாண்ட திட்ட முறைகளை அமலாக்க முயற்சித்தார். ஐந்தாண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன. உட்கட்டமைப்பை வலுப்படுத்திடும் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன. அணைகள் கட்டப்பட்டு விவசாய உற்பத்தி பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிற்சாலைகளுக்குத் தேவையான திறன்பெற்ற தொழிலாளர்களை உருவாக்க தொழிற்பயிற்சி நிறுவனங்கள் உருவாக்கப்படடன. இதன்மூலம் கல்வி வேலை வாய்ப்புகள் அதிகரித்தன. பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நலஅரசு என்ற வகையில் மக்கள் நலத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இத்திட்டங்களை அமல்படுத்திட பல புதிய அரசுத் துறைகளும் உருவாக்கப்பட்டன. புதிய அரசுத் துறை உருவாகுகின்ற போது அரசு ஊழியர் பணியிடங்களுக்கான தேவையும் அதிகரித்தது.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒற்றைத் துருவ உலகை உருவாக்க முனைந்தது. நல அரசு என்ற கோட்பாடு சிதைக்கப்பட்டு பெரு நிறுவனங்களின் நலனுக்கான கொள்கைகளும், சந்தைப் பொருளாதாரம் என்ற நடைமுறையும் அமலாக்க நிர்ப்பந்தங்கள் அளிக்கப்பட்டன. 1991-ல் நடைபெற்ற ராஜீவ் காந்தி படுகொடுலை அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தியது. அவ்வாண்டில் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு பிரதமராக பொறுப்பேற்ற நரசிம்மராவ் தலைமையிலான அரசு புதிய பொருளாதார கொள்கைகள் என்ற பெயரில் நலத்திட்டங்களை கைவிட்டு, தாராளமயம்-தனியார்மயம்-உலகமயம் என்ற கொள்கைகளை அமலாக்க துவங்கியது. இதன் விளைவாக பன்னாட்டு நிறுவனங்களின் நிர்ப்பந்தங்களை ஏற்று, தொழிலாளர் நலச்சட்டங்களை நீர்த்துப்போகும் பணிகளை அரசுகள் மேற்கொண்டன. மக்கள் நல சேவைகளை வழங்கும் பொறுப்பிலிருந்து அரசு தன்னை முற்றாக விடுவித்துக்கொள்ள ஆரம்பித்தது. இதன்காரணமாக தனியார் துறைகளில் மட்டுமன்றி, அரசுத் துறைகளிலும் பணி நிரந்தரம், முறையான ஊதிய விகிதங்கள், ஊதிய உயர்வு, விடுப்பு நன்மைகள், வருங்கால சேம நல நிதி, ஓய்வூதியம் போன்ற உரிமைகளைஅர்த்தமற்றதாக்கும் வகையில் அரசுத் துறைகளிலும் கல்வி நிறுவனங்களிலும் நிரந்தரமான பணிகளில் கூட தொகுப்பூதிய அடிப்படையிலும், ஒப்பந்த அடிப்படையிலும், நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. அரசுப் பணியில் வழங்கப்படும் சமூக நீதி சார்ந்த இடஒதுக்கீடுகளை பொருளற்றதாக மாற்றுவதற்கு இவைகள் பயன்பட்டதுடன், அரசுப் பணி அரசியல் அதிகாரத்துடன் தொடர்புடையது என்ற நிலையில், சமூகத்தின் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் திரளினர் அரசு நிர்வாகத்தில் பங்கேற்பதை தடுப்பதற்கும் தனியார் மயமாக்கல் கொள்கைகள் பயன்பட்டு வருகின்றன.

### சர்வதேச நிலைபாடு

சர்வதேச அளவில் தொழிலாளர் சந்தை குறித்து வளர்ந்த நாடுகளில் பல்வேறு ஆய்வுகள் நடத்தியதில், இன்றைய நவீன தொழில் நுட்பத்தின் மூலம் பெருமளவில் இயந்திரங்களையும், கணிணிகளையும் பயன்படுத்திடுவதன் மூலமாக தங்களுடைய லாப வேட்கையினை அதிகப்படுத்திட முடியும் எனவும், தொழிலாளர் போராட்டங்களை கட்டுப்படுத்திடவும் முடியும் எனவும் தீர்மானித்து, அரசு உட்பட அனைத்து துறைகளிலும் நவீனமயமாக்கல் என்ற பெயரில் ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் இறங்கினர். எனினும் வாக்கு வங்கியினை கைப்பற்ற மக்கள் நலத்திட்டங்களை அமல்படுத்துவது தவிர்க்க இயலாததாக உள்ள நிலையில், அரசுத் துறைகளில் தனியார் மூலம் ஊழியர்களை நியமிக்கும் நடைமுறையை (Outsourcing Appointment) அமல்படுத்தி, சொந்த நாட்டின் பிரஜைகளையே இரக்கமற்ற முறையில் சுரண்டும் ஏற்பாடுகளை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

**தமிழகத்தில்**

இன்று திட்டமிட்டு உருவாக்கப்பட்டு நிலவிவரும் வேலையில்லா திண்டாட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தகைய நியமனங்கள் உழைப்புச் சுரண்டலின் மிகக் கோரமானதொரு வடிவமாகும். தமிழகத்தின் அரசுத் துறைகளில் மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், கீழ்நிலைப் பணியிடங்கள் மட்டுமின்றி ஆய்வக நுட்பநர்கள், செவிலியர்கள், மருந்தாளுனர்கள், ஊர்தி ஓட்டுனர்கள் போன்ற தொழில்நுட்பம் சார்ந்த பணியிடங்களில் இத்தகைய தனியார் மூலமான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதும், அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது பணித் தேவைகளுடன் தொடர்பே இல்லாத அத்துக் கூலியில் நிர்ணயம் செய்யப்பட்டு அவர்களை நியமனம் செய்தனுப்பிய முகவர்களுக்கு அளிக்கப்படவுள்ளது என்பதும், இவ்வாறு நியமனம் செய்யப்படுவதற்குக் கூட அத்தனியார் முகவர்களுக்கு பெருந்தொகையை இலஞ்சமாக கொடுத்து பணியில் சேர்கின்ற அவலமான நிலையும் தமிழகத்தில் உள்ளது.

மோடி தலைமையிலான பாஜக அரசு 2014-ம் ஆண்டு பொறுப்பேற்றபின் பன்னாட்டு நிறுவனங்களின் வருகை அதிகரித்துள்ளது என்பது உண்மையே. ஏனெனில் மக்கள் தொகையில் அதிக எண்ணிக்கையில் உள்ள நாடுகளில் இந்தியா இரண்டாம் நாடு ஆகும். இதனால் மனித சக்தி தாராளமாக உள்ளதால் இந்திய உழைப்பாளி மக்களின் உழைப்பினை சுரண்டிட மத்திய, மாநில அரசுகளே ஆதரவளித்து வருவதால் பன்னாட்டு நிறுவனங்கள் ஏராளமாய் நுழைந்துள்ளன. இதற்காக இந்திய தொழிலாளர் நலச்சட்டங்களை பன்னாட்டு நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப திருத்தி, தளர்த்தி, நீர்த்துப் போகச் செய்து "**அமர்த்து, துரத்து**" (HIRE and FIRE) என்ற கோட்பாட்டினை செயல்படுத்தி வருகின்றனர்.

மேலும், மத்திய அரசின் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்கின்ற போதே அத்திட்டத்திற்கான ஊழியர்களை வெளிமுகமை (Outsourcing) மூலமாகவே நியமனம் செய்திட வேண்டும் என மத்திய அரசு, மாநில அரசுவும்கு கட்டளை இடுகிறது.

தமிழ்நாட்டில் 1982ஆம் ஆண்டு முதல் சத்துணவு திட்டத்தில் பணியாற்றக் கூடிய சத்துணவு ஊழியர்கள், ஊட்டச் சத்து திட்டத்தில் பணியாற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம ஊழியர்கள், ஊராட்சி எழுத்தர்கள், மக்கள் நலப் பணியாளர்கள் என இலட்சக்கணக்கான ஊழியர்கள் பணிப் பாதுகாப்பு இல்லாமல் கொத்தடிமை ஊதியம் பெற்றுக் கொண்டு மக்கள் நலத் திட்டங்களை அமல்படுத்தி வருகின்றனர்.

மேலும், ஏற்கனவே தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தேசிய பார்வை குறைபாடு கட்டுப்பாட்டு கழகம், மாநில தொழுநோயாளிகள் கழகம், தேசிய ஊரக சுகாதாரப் பணி, தேசிய நகர்ப்புற சுகாதாரப் பணி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம், தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்து கழகம், நோயாளிகள் நல கழகம் போன்ற நிறுவனங்களின் சேவைகள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு விடக்கூடியவை அல்ல. காலவேக மாற்றத்தில் இத்தகைய நிறுவனங்கள்/ கழகங்கள்/வாரியங்கள் தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியம் உள்ள நிலையில் அங்கு பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு ஊழியம் செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும். மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட செவிலியர்கள் கூட ஒப்பந்த அடிப்படையில் மிகக்குறைந்த ஊதியம் வழங்கப்பட்டு உயிர்காக்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது போன்ற கடுமையான உழைப்பில் ஈடுபடுத்தப்படுவர்களுக்கு உயிர் வாழ்வதற்கான குறைந்தபட்ச ஊதியம் கூட கிடைக்கப் பெறாத நிலையில், மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியாளர்கள் கோடிக்கணக்கான தொகையினை அம்பானி, அதானி போன்றவர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சமாக 5 லட்சம் கோடி ரூபாய் வரிச் சலுகைகளாகவும், மானியமாகவும் வழங்கி வருகின்றனர் என்பதை அறச்சீற்றத்துடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

**தற்போது தமிழகத்தில்.....**

தமிழக அரசின் 2018-19-ம் ஆண்டு வேலை வாய்ப்புத் துறையின் கொள்கை குறிப்பின்படி 84 லட்சத்து 19 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை கோரி பதிவு செய்து காத்திருக்கின்றனர்.

இவர்களில் 18 வயதிற்குட்பட்டவர்கள் 19 லட்சத்து 28 ஆயிரத்து 118 பள்ளி மாணவர்களும், 18 முதல் 23 வயதிற்குட்பட்டவர்கள் 18 லட்சத்து 34 ஆயிரத்து 664 பேர்கள் கல்லூரி மேற்படிப்பு படிக்கும் மாணவர்களும், 24 முதல் 35 வயதிற்குட்பட்டவர்களாக 29 லட்சத்து 93 ஆயிரத்து 634 பேர்களும், 35 முதல் 58 வயதுக்குட்பட்டு அரசு பணியினை பெற வாய்ப்புள்ளவர்களாக 11 லட்சத்து 28 ஆயிரத்து 792 பேர்களும் 58 வயதைக் கடந்தவர்களாக 5,860 பேர்களும் பதிவுதாரர்களாக உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2017-18-ம் ஆண்டில் பொதுத் துறையில் (மத்திய, மாநில அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள்) 4392 பேரும், தனியார் துறையில் 47,302 பேரும் பணி நியமனம் பெற்றுள்ளதாக கொள்கை குறிப்பில் தெரிவித்துள்ளனர். மேலும் 2011-ம் ஆண்டு முதல் மார்ச் 2018 வரையிலான காலகட்டத்தில் 85,777 பேருக்கு பொதுத் துறைகளில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 70 சதவீதத்திற்கும் மேலானவர்கள் பணிப் பாதுகாப்பற்ற தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும்.

### பணியாளர் சீரமைப்புக் குழு

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி (OECD) அமைப்பு நாடுகளின் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவின்படி இந்தியா உள்ளிட்ட நாடுகளில் உள்ள அமைப்பு சார்ந்த துறைகளில் உள்ள பணியிடங்களை குறைப்பதும், அரசின் திட்டங்களுக்கு தேவையான ஊழியர்களை அமர்த்து மற்றும் துரத்து என்ற அடிப்படையில் சமூக பாதுகாப்பற்ற பணி நியமனங்களை செய்திடுவது என்ற அடிப்படையில்தான் தற்போது தமிழக அரசு நியமித்துள்ள பணியாளர் சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இன்று தமிழகத்தில் உள்ள வேலையில்லா திண்டாட்டத்தை பயன்படுத்திக் கொண்டு குறைந்த சொற்ப ஊதியத்தில் அரசுப் பணி என்ற தேனினைத் தடவி உழைப்புச் சுரண்டலை நடத்திடவே இந்த சீரமைப்புக்குழு செயல்படும் என்பதில் ஐயமில்லை.

ஏற்கனவே மின்மயமாக்கல், நவீனமயமாக்கல் என்ற பெயரில் எழுத்தர் (அமைச்சுப் பணியிடங்கள்) பணியிடங்களை குறைத்திடும் வகையில் கணிணிகள் நிறுவப்பட்டு ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் களப்பணிகளில் நிரந்தரப் பணியிடங்களை குறைப்பதற்காக தனியார் மூலமான புறஆதார நியமனங்களை (Outsourcing) மேலும் விரைவுபடுத்திடுவதே இச்சீரமைப்புக் குழுவின் நடவடிக்கையாக இருக்கும்.

### இதனால் ஏற்படும் விளைவுகள்

இது போன்ற விளைவுகளால் மனித உழைப்பினை மேலும் சுரண்டிடவும், பட்டம் பெற்று வேலை கோரி காத்திருக்கும் இளைஞர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உத்திரவாதம் இல்லாத நிலையும், ஆட்சியாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அரசுத் துறைகளில் சமூக சீர்கேடுகள் அரங்கேறிடவும், அடிப்படை சேவைகள் அனைத்தும் அரசின் கடமை என்பதை கைவிட்டு அனைத்தும் வருவாய் நோக்கமே என வணிகமாக மாற்றிடும் என்பதுடன், காலம் காலமாக போராடிப் பெற்ற இடஒதுக்கீடு என்ற சமூக நீதி கோட்பாடும் கைவிடப்படும் அபாயகரமான அறிகுறியாகும்.

எனவே, வேலையில்லா திண்டாட்டம் என்பது ஆட்சியாளர்களால் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. வேலையின்மையின் சதவீதம் ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்நிலையில் முதலாளித்துவத்தின் லாப வெறிக்கு அடிபணிந்து உழைப்புச் சுரண்டலை பல வடிவங்களில் நிறைவேற்றி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாகத்தான் மதிப்பூதியம், தொகுப்பூதியம், தினக்கூலி, ஒப்பந்த முறை மற்றும் வெளிமுகமை நியமன முறை என அரசும், தனியார் நிறுவனங்களும் செயல்படுத்தி வருகின்றன.

அரசின் துறைகளிலேயே நடைமுறைப்படுத்தப்படும் இந்த உழைப்புச் சுரண்டலுக்கு எதிராக அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் மட்டுமன்றி மாணவர்களும், இளைஞர்களும் கண்டன குரல் எழுப்புவதுடன் பரந்துபட்ட ஒற்றுமையுடன் அனைத்து உழைப்பாளி மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களின் வாயிலாகத்தான் வெற்றி கொள்ள முடியும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உறுதியாக நம்புகிறது.

மத்திய, மாநில ஆட்சியாளர்களின் இந்த கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை எனில், நமது வருங்கால சந்ததியின் வாழ்க்கை முற்றாகப் பறிக்கப்படுவதற்கு நாமே வழிவகுத்தவர்களாகி விடுவோம்.



வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பணிக்காக காத்திருக்கும் இளைஞர் பட்டாளம்

எனவே தமிழக அரசின் "பணியாளர் சீரமைப்புக் குழு''வினை (Staff Rationalization Committee) கலைத்துவிட்டு தமிழகத்தின் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை கோரி பதிவு செய்துள்ள வாலிபர்களுக்கு பணிப் பாதுகாப்புடன் கூடிய வேலை வாய்ப்புகள் வழங்கிட வலியுறுத்தியும், அரசு துறைகளில் சமூக பாதுகாப்பற்ற வேலை நியமனங்கள் செய்திடுவதை தடுத்திடவும், தமிழக அரசு ஊழியர்களும், இளைஞர்களும் கைகோர்த்து அரசின் வஞ்சக முயற்சிகளுக்கு எதிராக போராட்டக் களம் காண வேண்டிய தேவையை காலம் நமக்கு கையளித்திருக்கிறது. ஒன்றுபட்ட போராட்டங்களும், சக்திமிகு பங்கேற்பும் மட்டுமே நம்மிடம் உள்ள ஆயுதம் என்ற நிலையில் அரசு ஊழியர்-ஆசிரியர்-வாலிபர்-மாணவர் என்ற வலிமைமிக்க கூட்டமைப்பை உருவாக்கி, தொடுக்கப்பட்டுள்ள கொடுந்தாக்குதலை முறியடித்திட இளைஞர்கள் முன்வர வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அறைகூவி அழைக்கின்றது. ❖

# பொன்விழா கண்ட நீதித்துறை ஊழியர் சங்கம்

**த**மிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கத்தின் 11ஆவது மற்றும் பொன்விழா மாநில மாநாடு சென்னையில் ஜூலை 26, 27 மற்றும் 28 தேதிகளில் நடந்தது. மாநில பிரதிநிதித்துவப் பேரவை மற்றும் பொது மாநாடு என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மாநில பிரதிநிதித்துவப் பேரவை சென்னை வேப்பேரியில் உள்ள சால்வேசன் ஆர்மி மனிதவள மேம்பாட்டு மையத்தில் 26.7.2018 காலை முதல் 28.7.2018 முற்பகல் வரை நடந்தேறியது.

இம்மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கத்தின் அனைத்து மாவட்ட மையங்களிலும் இருந்து பிரதிநிதிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். பொன்விழா மாநாட்டின் சங்க முழக்கமாக 'நீதி வழுவாமையும் நெறி பிறழாமையும் பாராளட்டும்!' நீதித்துறைக்கே உரித்தான முழக்கமாகவும் சமத்துவம், உண்மை நேர்மை, நெறி தவறாமை போன்ற இன்றைய காலகட்டத்திற்கு அவசியமான கருத்தை எதிரொலிப்பதாகவும் அமைந்திருந்தது. நீதித்துறையில் மாநில மற்றும் மாவட்ட பொறுப்புகளை வகித்து மறைந்த தோழர்கள் எஸ்.பி.இராஜேந்திரன், சி.ஜெயக்குமார் மற்றும் வி.புஷ்பதுரை ஆகியோரின் சங்கப் பணிகளை சிறப்பிக்கும் வகையில் அன்னார்களின் பெயர்களின் நினைவரங்கம் அமைக்கப்பட்டு அதில் மாநில பிரதிநிதித்துவப் பேரவை நடைபெற்றது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் மாண்புமிகு து.அரிபரந்தாமன் அவர்கள் சங்கக் கொடியேற்றி தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி துவக்கவுரை நிகழ்த்தியது நீதித்துறை ஊழியர் சங்க பிரதிநிதிகளை உற்சாகமூட்டியது. மாலையில் நடந்த கருத்தரங்கத்தில் எழுத்தாளர் பவா.செல்லத்துரை

அவர்களின் கதை சொல்லல் மற்றும் கலந்துரையாடல் மாலை நேர நிகழ்வை மகிழ்வாக்கியது.

இரண்டாம் நாள் காலையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு வாழ்த்துரை வழங்கி இரண்டாம் நாள் நிகழ்வுகளை துவக்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கு.வெங்கடேசன் வாழ்த்துரை வழங்கினார். மதிய உணவு இடைவேளையில் நீதித் துறை வரலாற்றில் முதல்முறையாக மகளிர் கருத்தரங்கத் திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் 'நீதித் துறையில் பெண்களின் பங்கும் பாடுகளும்' என்ற தலைப்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.செந்தில் குமார், 'வரலாற்றில் பெண்களும் பெண்களின் வரலாறும்' என்ற தலைப்பில் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் கருத்துரையும் கருத்தரங்கில் கலந்து கொண்ட நீதித் துறையில் பணிபுரியும் பெண்களுக்கு புதிய அனுபவமாக இருந்தது. மீண்டும் மாலையில் நடைபெற்ற கருத்தரங் கில் 'ஜிந்தாபாத் ஜிந்தாபாத்' என்ற தலைப்பில் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன், 'பறிபோகும் உரிமைகளும், பாதுகாக்கும் வழிகளும்' என்ற தலைப்பில் பொதுப் பள்ளிக்கான மாநில மேடை தமிழ்நாடு அமைப்பின் பொதுச் செயலாளர் பு.பா.பிரின்ஸ்




கஜேந்திரபாபு ஆகியோர் பேசினர்.

மூன்றாம் நாள் காலை நிகழ்வில் சங்கத்தின் வழக்குரைஞர் ஆர்.நீலகண்டன், அகில இந்திய நீதித் துறை ஊழியர்கள் கூட்டமைப்பின் தலைவர் ஷகீல் அகமது மொய்தீன், பொதுச் செயலாளர் லஷ்மா ரெட்டி மற்றும் தென் மண்டலத் தலைவர் ஹெச்.ஏ.நாகேஷ் ஆகியோர் பொன்விழா மாநாட்டை வாழ்த்தி உரையாற்றினர். பிரதிநிதித்துவ பேரவையின் நிறைவுரையை முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் இந்திய தொழிற்சங்க மையத்தின் மாநிலத் தலைவருமான அ.சவுந்தரராசன் ஆற்றினார்.

மாலை 4.00 மணியளவில் சென்னை வாலாஜா சாலை கலைவாணர் அரங்கத்தின் அருகிலிருந்து தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கத்தின் மாநாடு நடைபெறும் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபம் வரை பிரம்மாண்ட பேரணி அணிவகுத்தது. சுமார் 4000 பேர் நிச்சயம் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட மாநாடு, கலைஞர் கருணாநிதி அவர்களின் உடல்நிலை சம்பந்தமாக பரவி வந்த வதந்திகள் காரணமாக பெரும்பாலான பெண்கள் பொது மாநாட்டில் கலந்து கொள்ள முடியாமல் போனது. இருப்பினும் சுமார் 2000 நீதித்துறை ஊழியர்கள் கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பித்தனர். மாநாட்டில் உச்சநீதி மன்றத்தின் நீதியரசரும், சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதியரசருமான மாண்புமிகு சஞ்சய் கிஷன் கவுல் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். சென்னை உயர்நீதி மன்றத்தின் மாண்பமை நீதிபதிகள் எஸ்.பாஸ்கரன், ஆர்.சுப்பிரமணியன், கிருஷ்ணன் ராமசாமி ஆகியோர் கலந்து கொண்டு பொன் விழாவை வாழ்த்தி பேசினர்.

மாநாட்டு நிகழ்ச்சியில் பார்வையாளர்களாக மாண்புமிகு நீதியரசர்கள் எஸ்.வைத்தியநாதன் மற்றும் சி.சரவணன் ஆகியோர் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர். மாநாட்டு நிகழ்ச்சியில் பொன்விழா மாநாட்டு மலரை உச்சநீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு




சஞ்சய் கிஷன் கவுல் அவர்கள் வெளியிட்டார்.

முன்னதாக மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் சங்கத்தின் புதிய மாநில நிர்வாகிகள் தேர்ந்தெடுக் கப்பட்டனர். தலைவராக த.செந்தில்குமார் (சேலம்) பொதுச் செயலாளராக ஐ.ரெ.அருணாசலம் (திருவாரூர்) பொருளாளராக பா.கண்ணபிரான் (தஞ்சாவூர்) மாநில துணைத் தலைவர்களாக எஸ்.காளிமுத்து (சென்னை), க.மனோசரன் (தேனி), வ.பாண்டியன் (காஞ்சிபுரம்), ச.பால்ராஜ் (விருதுநகர்), ச.துரைராஜ் (வேலூர்), மாநிலச் செயலாளர்களாக சி.மூர்த்தி (சென்னை), ச.பிரபாகரன் (மதுரை), இ.காலித் அகமது (கோயம்புத்தூர்), சு.பிரகாஷ் (ஈரோடு), இ.இசக்கியப்பன் (தூத்துக்குடி) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**- குணா**

# தோழர் இரா.முத்துசுந்தரம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு சிறப்பு கருத்தரங்கம்

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன முடிவின்படிடி நவம்பர் 15-ல் நடைபெறவுள்ள அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிடும் வகையில் நாடு முழுவதும் 30.07.2018-க்குள் கருத்தரங்கத்தை நடத்திடுவது என்ற நோக்கில் நமது மாநிலத்தில் தோழர் ஆர்.எம்.எஸ். அவர்களின் மறைந்த நாளான 29.7.2018 அன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நினைவேந்தல் சிறப்பு கருத்தரங்கம் நடத்திட, கடந்த 2018 ஜூலை 21 மற்றும் 22 ஆகிய இரண்டு நாட்கள் மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில பிரதிநித்துவப் பேரவை முடிவின்படி தமிழக அரசு ஊழியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்யக் கோருதல் மற்றும் தமிழகத்தின் இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி, அரசுப் பணிகளை குறைத்து ஆட்குறைப்பு செய்து அரசுப் பணிகளை அவுட்சோர்சிங்கில் கொண்டுவர போடப்பட்டுள்ள அரசு ஆணை எண் 56-ஐ ரத்து செய்ய வலியுறுத்தியும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன தேசியத் தலைவர் ஆர்.முத்துசுந்தரம் அவர்களின் முதலாமாண்டு நினைவு தினமான 29.7.2018 அன்று கருத்தரங்கம் நடத்துவது என்ற முடிவின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் கருத்தரங்கங்கள் நடைபெற்றன. இதன் ஒரு பகுதியாக..

### வடசென்னை

30.7.2018 அன்று மாலை எழும்பூர் ஜீவனஜோதி அரங்கில் நடைபெற்ற கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி தலைமையேற்றார். எழும்பூர் பகுதிக்குழு தலைவர் அன்சர் பாஷா வரவேற்றார். மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி, முன்னாள் மாநில துணைத் தலைவர்கள் எஸ்.ஏ.வெற்றிராஜன், பி.எஸ்.அப்பர் ஆகியோர் உரையாற்றினர். அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் மு.அன்பரசு விளக்கவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் எஸ்.பார்த்திபன் நன்றி கூறினார்.






### தென்சென்னை

மாவட்ட மையத்தின் சார்பாக 30-7-18 அன்று மாலை 5.30 மணிக்கு சென்னை, சேப்பாக்கம்,



எழிலகம் வளாகத்தில் "அகில இந்திய வேலை நிறுத்தங்களும், தோழர் ஆர்.எம்.எஸ்ஸும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கத்திற்கு மாவட்ட தலைவர் சா.டானியல் ஜெயசிங் தலைமை தாங்கினார் மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் இரா.சீனிவாசன் கருத்துரை ஆற்றினார். மாவட்ட பொருளாளர் ப.புகழேந்தி நன்றி கூறினார்.

### கரூர்

மாவட்டத் தலைவர் எம்.மகாவிஷ்ணன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல் வரவேற்றார். மாநில துணைத் தலைவர் எம்.சுப்பிரமணியன் கருத்துரை



வழங்கினார். தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட செயலாளர் ஐ.ஜெயராஜ், அரசு ஊழியர் சங்க மாவட்ட துணைத் தலைவர் கே.செல்லமுத்து, மாவட்ட இணைச் செயலாளர்கள் ஆர்.தாமோதரன். க.திருநாவுக்கரசு, கெ.கருணாகரன், மாவட்ட மகளிர் அமைப்பாளர் செல்வராணி ஆகியோர் பங்கேற்று உரை நிகழ்த்தினர். நிறைவாக மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றி கூறினார்.

### நாகப்பட்டினம்

மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் நாகை அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் வரவேற்புரையாற்றினார். முன்னாள் மாநில துணைத் தலைவர் சு.சிவகுமார் ஆர்.முத்துசுந்தரம் அவர்களைப் பற்றிய



நினைவலைகளை பகிர்ந்து வாழ்த்துரை வழங்கினார். "அகில இந்திய வேலைநிறுத்தங் களும் தோழர் ஆர்.முத்துசுந்தரமும்" என்ற தலைப்பில் மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர் ராஜன் கருத்துரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றியுரையாற்றினார்.

### தருமபுரி

“மக்கள் விரோத கொள்கைகளை முறியடிப்போம், உழைக்கும் வர்க்கத்தின் உரிமையை பாதுகாப்போம்” என்ற தலைப்பில்





கருத்தரங்கம் தருமபுரி சிஐடியு அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் வரவேற்றார். மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்செல்வி கருத்துரை வழங்கினார். வருவாய்துறை அலுவலர் சங்க மாவட்ட துணைத் தலைவர் எஸ்.சரவணன், பட்டு வளர்ச்சித் துறை ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.சிவப்பிரகாசம், அரசு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட துணைத் தலைவர்கள் எம்.யோகராசு, பி.எஸ்.இளவேனில், சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் சி.எம்.நெடுஞ்செழியன் கூட்டுறவு துறை ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் பழனியம்மாள் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

### மதுரை

மாவட்ட சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு மாவட்டத் தலைவர் சு.ஜெயராஜராஜேஸ்வரன் தலைமையேற்றார். தோழர் இரா.முத்துசுந்தரம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி கருத்தரங்கத்திற்கு வந்திருந்த அனைவராலும் அவரது திருஉருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவேந்தல் மற்றும் கருத்தரங்கத்திற்கு வந்திருந்தவர்களை மாவட்ட துணைத் தலைவர் த.இராமமூர்த்தி வரவேற்றுப் பேசினார். மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா





உரையாற்றினார். அகில இந்திய வேலை நிறுத்தம் ஏன்? என்ற தலைப்பில் மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனத்தின் தமிழ் மாநில அமைப்புச் செயலாளர் சு.சு.ஷாம்நாத் கருத்துரையாற்றினார். மாநில துணைத் தலைவர் ஆ.செல்வம் சிறப்புரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் அ.அசோக்குமார் நன்றி கூறினார்.

### ஈரோடு

ஈரோடு மாவட்டத்தின் சார்பில் நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு மாவட்ட தலைவர் ஜெ.பாஸ்கர் பாபு தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் கே.வெங்கிடு வரவேற்புரையாற்றினார். மாநிலப் பொருளாளர் எம்.தங்கராஜ் கருத்துரையாற்றினார். தோழர் ஆர்.எம்.எஸ். துனணவியார் இக் கூட்டத்தில் கௌரவிக்கப்பட்டார். நிறைவாக மாவட்ட பொருளாளர் வி.உஷாராணி நன்றி கூறினார்.

### காஞ்சிபுரம்

மதுராந்தகத்தில் மாவட்டத் தலைவர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சா.முகம்மது உசேன் வரவேற்றார். மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வி கருத்துரையாற்றினார். மாவட்ட பொருளாளர் பி.இராமமூர்த்தி நன்றி கூறினார். இதில் 46 பெண்கள் உட்பட 110 பேர் பங்கேற்றனர்.

### தஞ்சாவூர்

29.07.2018 அன்று நடைபெற்ற கருத்தரங் கத்திற்கு மாவட்டத் தலைவர் சை.கோவிந்தராசு தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் தோழர் ஆ.ரெங்கசாமி வரவேற்புரை ஆற்றினார். மாநிலச் செயலாளர் இரா.பன்னீர்செல்வம் துவக்கவுரை ஆற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் சிவ.ரவிச்சந்திரன் கருத்துரையாற்றினார். முன்னாள் மாநில துணைத் தலைவர் கே.எம்.தியாகராஜன் சிறப்புரை ஆற்றினார். மாவட்டப் பொருளாளர் எஸ்.கோதண்டபானி நன்றி கூறினார்.

மேற்கண்ட கருத்தரங்குகளில், சிறப்பு





காலமுறை ஊதியத்தை ஒழித்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். ஊதிய முரண் பாடுகள் களையப்பட வேண்டும் 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை வழங்க வேண்டும் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும், பெட்ரோல் டீசல் விலை உயர்வை கட்டுபடுத்தி விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் உள்ளிட்ட 15 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் செப்டம்பர் 5ஆம் தேதியன்று டில்லியில் நாடாளுமன்றம் நோக்கி பேரணியை சிறப்பாக நடத்துவது, நவம்பர் 15 அகில இந்திய வேலைநிறுத்த போராட்டத்தை சக்தியாக நடத்துவது குறித்து கருத்தரங்கில் வலியுறுத்தப் பட்டன. ❖

# அரசு ஊழியர்களின் மனதில் நீங்கா இடம் பெற்ற மதுரை

தேரா மன்னா செப்புவது உடையேன்...”

என்று சிலப்பதிகார கண்ணகி தன் கணவனை இழந்த நிலையில் தலைவிரி கோலாமாய் நின்ற நிலையிலும் கிடைத்திடா நீதி

2000 வருடங்களுக்குப் பின், நடைபெற்ற ஜாக்டோ-ஜியோவின் கடுமையான போராட் டத்தை திசை திருப்பி வழக்காடு மன்றத்தின் மூலம் தடை பெற்றாலும் தொடர்ந்திட்ட போராட்டத்தால் தலைமைச் செயலாளரை நீதிமன்ற படியேற்றி 01.10.2017ல் ஊதிய மாற்றத்தை பெற்றதின் மூலம் மதுரை, அரசு ஊழியர்களின் மனதில் நீங்கா இடம்பெற்றது.

நீலக்குறிஞ்சி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறையே பூக்கிறது. அதுபோல நீலநிறக் கொடியுடைய நமது சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவை மதுரையில் 14 வருடங்களுக்கு பிறகு நடை பெற்றது.

இன்றைய காலகட்டத்தில் அரசு ஊழியர்கள் மட்டுமல்லாமல் விவசாயிகள் மாணவர்கள் இளைஞர்கள் பொதுமக்களின் மத்தியில் மிகச்சிறந்த இடத்தை நமது அரசு ஊழியர் சங்கம் பெற்றுள்ளது என்பதை நாங்கள் பேரவைக்கு தேவையான பொருளோ பணமோ கேட்கும் இன்முகத்துடன் மனமுவந்து அளித்ததிலேயே பிரகாசமாக தெளிவுற்றது.

இதனாலேயே, தொடர் இயக்கம் மற்றும் அகில இந்திய மாநாட்டு நிதி என பல்வேறு பணிகளுக்கு மத்தியிலும் குறுகிய காலத்தில் பேரவையை சிறப்பாக நடத்திட முடிந்தது.

எந்தெந்த வகையிலெல்லாம் மற்றைய பேரவைக்கும் இதற்கும் வேறுபாட்டை காண்பிக்க முடியும் என்று யோசித்ததின் அடிப்படையிலேயே நாவல் பழம்,இளநீர்,



கொய்யாப்பழம் வழங்க முடிந்தது சிறு உதாரணமே நமது தோழர்களை பல்வேறு குழுக்களாக பிரித்து திட்டமிட்டபடியாலேயே அதிகப்படியான பணிகளை எளிதாக்கிட முடிந்தது.

ஜாக்டோ-ஜியோவின் ஒற்றுமையை கட்டிக் காத்து வருவதாலேயே தோழமை சங்கத்தினரின் ஒத்துழைப்பும் அருமையாக அமைந்தது.

கடுமையான நெருக்கடிக்கு மத்தியிலும் 2004ல் நடைபெற்ற மதுரை மாநாட்டுக்கு பிறகு மிகப்பெரிய அரசியல் மாற்றமும் அதனைத் தொடர்ந்து பறிக்கப்பட்ட அனைத்து உரிமைகளும் பெறப்பட்ட வரலாறு உண்டு.

அதுபோலவே இந்தப்பேரவையில் இயற்றப் பட்ட தீர்மானங்களான புதிய ஓய்வூதியம் ரத்து , அரசாணை 56 ரத்து, அனைத்துப் பிரிவினரும் காலமுறை ஊதியம் பெற, தனியார்மயத்தை தடுத்து நிறுத்திட நிச்சயம் அமையும் என்ற நம்பிக்கை என்னைப் போன்று புதியதாக பணிக்கு வந்துள்ள இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ளதை உணர முடிகிறது...

- **க.நீதிராஜா,**
மதுரை

# அரசு ஊழியர் சங்க மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவைகள்





**திருவள்ளூர்**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட பிரதிநிதித்துவ பேரவை ஜுலை 14 அன்று திருவள்ளூர் வட்டாச்சியர் வளாகத்தில் மாவட்ட தலைவர் கோ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட துணைத் தலைவர் எம். சத்தியநாதன் வாசித்தார். மாவட்ட துணைத் தலைவர் ஜி.மில்கிராஜாசிங் வரவேற்றார். மாவட்ட பொருளாளர் எஸ். காந்திமதிநாதன் வேலை அறிக்கையை முன்மொழிந்தார். தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாநில பொருளாளர் எம். ஜம்பு துவக்கவுரையாற்றினார்.

சங்கத்தின் மாவட்ட துணைத் நிர்வாகிகள் எம்.சீனிவாசன், இ.மணிகண்டன், க.திவ்யா, இ.சந்திரசேகரன், தமுஎகச நிர்வாகி து.மகேந்திரன் உட்பட பலர் வாழ்த்தி பேசினர். அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் தெய்வசிகாமணி நிறையுரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் இரா.பாண்டு ரங்கன் நன்றி கூறினார். மாவட்டத் தலைவராக கோ.இளங்கோவன், மாவட்டச் செயலாளராக எஸ்.காந்திமதிநாதன், பொருளாளராக ஆர்.பாண்டுரங்கன், துணைத் தலைவராக இ.சந்திரசேகரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**தென் சென்னை**

7-7-18 அன்று தோழர் முத்துசுந்தரம் அரங்கத்தில் (வணிகவரி பணியாளர் சங்க அலுவலகம், கிரீம்ஸ் சாலை, சென்னை-6) நடைபெற்றது. மாவட்ட தலைவர் சா.டானியல் ஜெயசிங் தலைமை தாங்கினார், மாவட்ட இணைச் செயலாளர் த.கோவிந்தராஜன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார், மாவட்ட துணைத் தலைவர் உ.சுமதி வரவேற்புரை ஆற்றினார். மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் துவக்க உரை யாற்றினார். மாவட்டச் செயலாளர் எம்.வெங்கடேசன் வேலை மற்றும் ஸ்தாபன அறிக்கையை சமர்பித்தார். மாவட்ட பொருளாளர் ப.புகழேந்தி வரவு-செலவு அறிக்கையை வாசித்தார்.

பேரவையை வாழ்த்தி சிஐடியு தென்சென்னை மாவட்டத் தலைவர் இ.பொன்முடி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வடசென்னை மாவட்ட செயலாளர் ஜெ.பட்டாபி ஆகியோர் பேசினர். மாவட்ட துணைத் தலைவர் இரா.ந.நம்பிராஜன், மாவட்ட இணைச் செயலாளர்கள் இரா.வெற்றி செல்வன், எம்.சுதா ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்து நிறைவேற்றப்பட்டன. பொதுச் செயலாளர் மு.அன்பரசு நிறைவுரை ஆற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் தெ.வாசுகி நன்றி கூறினார்.

**காஞ்சிபுரம்**

14.7.2018 அன்று மாவட்ட பேரவை கொடியேற்ற நிகழ்ச்சியோடு துவங்கியது. மாவட்டத் தலைவர் வெ.லெனின் சம்மேளனக் கொடியினையும், மாவட்டச் செயலாளர் சா.முகம்மது உசேன் அரசு ஊழியர் கொடி யினையும் ஏற்றி வைத்தனர். சிஐடியு மாவட்டச் செயலாளர் இ.முத்துக்குமார் துவக்கவுரை யாற்றினார். செயலாளர் அறிக்கையை சா.முகம்மது உசேனும், நிதிநிலை அறிக்கையை





பி.இராமமூர்த்தியும் சமர்ப்பித்தனர். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் எஸ்.குமார், அரசு ஊழியர் சங்க முன்னாள் மாவட்டத் தலைவர் பி.பன்னீர்செல்வம், ஊரக வளர்ச்சித் துறையின் சிவ.தினகரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட துணைத் தலைவராக ஏ.பேபியும், மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளராக கே.பூங்குழலியும் தேர்வு செய்யப்பட்டனர். மாநிலச் செயலாளர் தி.கலைச்செல்வி நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.கோவிந்தன் நன்றி கூறினார்.

### கரூர்

*30.6.2018* அன்று நடைபெற்றது. சங்கக் கொடியை மாவட்ட துணைத் தலைவர் என்.வெங்கடாச்சலமும், சம்மேளனக் கொடியை மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனனும் ஏற்றி வைத்தனர். பேரவைக்கு மாவட்டத் தலைவர் எம்.மகாவிஷ்ணன் தலைமையேற்றார். மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.தாமோதரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைத் தலைவர் என்.வெங்கடாச்சலம் வரவேற்றார். மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனன் துவக்கவுரை யாற்றினார். செயலாளர் கே.சக்திவேல் மற்றும் பொருளாளர் பொன்.ஜெயராமன் முறையே செயலாளர் மற்றும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தனர். சிஐடியுவின் சி.முருகேசன், ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் ஐ.ஜெயராஜ், ஓய்வூதியர் சங்கத்தின் வி.மோகன்குமார் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன் நிறைவுரை யாற்றினார். இதனைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சித் துறையின் முன்னாள் மாநில பொதுச் செயலாளரும், அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் துணைத் தலைவருமான பி.கிருஷ்ண சாமிக்கு பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. இதில் பல்வேறு துறைவாரி சங்க நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தி பேசினர். மாவட்டப் பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றி கூறினார்.

### கடலூர்

*8.7.2018* அன்று மாவட்டத் தலைவர் எம்.குமார் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக சங்கக் கொடியை மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தன னும், சம்மேளனக் கொடியை மாநில துணைத் தலைவர் எஸ்.பார்த்திபனும் ஏற்றி வைத்தனர். மாவட்ட துணைத் தலைவர் ட்டி.நாட்டுதுரை அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட இணைச் செயலாளர் சி.வெங்கடேசன் வரவேற்றார். மாநிலச் செயலாளர் என்.ஜனார்த்தனன் துவக்கவுரையாற்றினார். செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் வேலை அறிக்கையினையும், பொருளாளர் தா.இரவிச்சந்திரன் நிதிநிலை அறிக்கையினையும் சமர்ப்பித்தனர்.

அனைத்துத் துறை ஊழியர் சங்கத்தின் டி.புருஷோத்தமன், மாவட்டச் செயலாளர் ஆர்.மனோகரன், அனைத்து குடியிருப்போர் நலச் சங்கத்தின் எம்.மருதவாணன், காப்பீட்டுக் கழகத்தின் கே.பி.சுகுமாரன், முன்னாள் மாவட்டச் செயலாளர் என்.காசிநாதன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்டத் தலைவராக ஆர்.பாலசுப்ர மணியனும், மாவட்டத் துணைத் தலைவராக எம்.குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநில துணைத் தலைவர் எஸ்.பார்த்திபன் நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் டி.வெங்கடேசன் நன்றி கூறினார்.

### தஞ்சாவூர்

*19.5.2018* அன்று கும்பகோணத்தில் மாவட்டத் தலைவர் சை.கோவிந்தராசு தலைமையில் நடைபெற்றது. சங்கக் கொடியினை மாவட்டத் தலைவர் சை.கோவிந்தராசுவும், சம்மேளனக் கொடியினை மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர ராஜனும் ஏற்றி வைத்தனர். மாவட்ட துணைத் தலைவர் கை.கோவிந்தராஜ் அஞ்சலித் தீர்மானம் வாசித்தார். கும்பகோணம் வட்டத் தலைவர் ஜி.கண்ணன் வரவேற்றார். மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ஆ.ரெங்கசாமி வேலை அறிக்கையினையும், மாவட்ட பொருளாளர் எஸ்.கோதண்டபாணி நிதிநிலை அறிக்கையும் தாக்கல் செய்தனர். மாவட்ட நிர்வாகிகள் சிவ.இரவிச்சந்திரன், எஸ்.தமிழ்வாணன், அ.விஸ்வேஸ்வரன், ப.கோதண்டபாணி, தி.ரவிச்சந்திரன், மகளிர் துணைக் குழு உறுப்பினர்கள் எச்.உமா, ஏ.ஆர்.கவிதா, எஸ்.நீலாஜெயந்தி, டி.கோகிலாதேவி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். துறைவாரி சங்க நிர்வாகிகள் ஆர்.ராஜகோபாலன், வி.பார்த்தசாரதி ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட இணைச் செயலாளராக ஏ.செந்தில்குமார் தேர்வு செய்யப்பட்டார். மாநிலச் செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் எஸ்.செல்வி நன்றி கூறினார். ❖

# இந்தியச் சுதந்திரம்?

"விடுதலை வேண்டுமா
என்றது காலம்
இல்லை
சுதந்திரம் வேண்டுமென்றேன்
வேறுபாடு என்னவென்றே
வினவியது காலம்
சிறையிலிருந்து விடுபடுதல்
விடுதலை
எம் சிறைகள் உடைபடுதல்
சுதந்திரம் என்றேன்"


சுதந்திரத்துக்காகவும் விடுதலைக் காகவும் இந்திய மக்களின் வீரம் செறிந்த போராட்டங்களை வெறுமனே நினைவு கூர்வது மட்டும் இன்றைய தேவை அல்ல. அதற்கு மேல் இந்தப் பாரம்பரியத்திலிருந்து இந்திய விடுதலை நிறைவேற்றாத பணிகளை முடிப்பதற்கான போராட் டத்தை முன்னெடுத்துச் செல்ல அதிலிருந்து ஊக்கத்தையும் வலிமை யையும் பெறுவது அவசியம்.

1757ல் நடந்த பிளாசி யுத்தத்தைத் தொடர்ந்து இரு நூற்றாண்டுகளுக்கு பிரிட்டிஷ் காலனியாதிக்க நுகத்தடி யிலிருந்து இந்தியாவை விடுவிக்க பல்வேறு வழிகளில் புரட்சிகள் ஒன்றிணைந்தன. எனினும் இந்திய ஆளும் வர்க்கங்கள் வேண்டு மென்றே பல்வேறு புரட்சிகளை மறைத்து விட்டு தமது நலனுக்கானவற்றை மட்டுமே வெளிச்சமிட்டுக் காட்டின. இந்தக் காவியப் போராட்டத்தை நேர்மையாகவும், விருப்பு வெறுப்பின்றியும் கூறுவதுதான் நாம் நம்மைப் புரிந்து கொள்ளவும், பாராட்டைப் பெறாத வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தவும், இதுவரை நிறைவேறாத பணிகளை முடிப்ப தற்கான போராட்டத்தை முன்னெ டுத்துச் செல்வதற்குமான ஒரே வழியுமாகும்.

மகாத்மா காந்தியின் கொலையாளி கள் உட்பட இந்தக் காவியப் போராட் டத்தின் பாரம்பரியத்தை வரித்துக் கொள்ள முயலும் நிலையில் இன்றைய கால நிலை உள்ளது. வேறு சில தரப்புகளோ விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கு குறித்து மீண்டும் மீண்டும் கூறப்படும் அவதூறுகளை வெளிப்படுத்தும் தூற்றல்கள் விடுதலைப் போராட்டத்தில் அற்பப் பங்கையோ அல்லது எதிர் விளைவுகளை ஏற்படுத்திய பங்கையோ வகித்த பகுதிகளிலிருந்து வருவது வியப்புக்குரியதல்ல. எண்ணற்ற மக்கள் தேச சுதந்திரத்திற்காக தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் சிறை வைக்கப்பட்டனர்; தூக்கிலிடப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் அந்தமான் சிறையின் சிறிய அறைகளில் ஆயுட் கைதிகளாக அடைக்கப் பட்டனர்.

பகத்சிங்கின் சக தோழர்களான பண்டிட் கிஷோர் லாலும், சிவவர்மாவும் அந்தமான் கொடுஞ்சிறைக்கு அனுப்பப்பட்ட போது அங்கு கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைந்து அவர்களது இறுதிக் காலம் வரை பணிபுரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பல சுதந்திரப் போராட்ட வீரர்கள் சுதந்திர இந்தியாவில் இந்திய மக்களின் உண்மையான முழுமையான விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைந்தனர். ஏனெனில் கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு, சுதந்திரம் என்பது அரசியல் விடுதலை மட்டுமல்ல. அரசியல் சுதந்திரமானது பசி, வறுமை, பாதுகாப்பின்மை ஒழிக்கப்பட்ட சமூகமாக மாற்றப்பட வேண்டியிருந்தது. இந்தப் போராட்டம் இன்னும் தொடர்கிறது.

1917ன் ரஷ்யப் புரட்சி தீவிரமான விளைவை ஏற்படுத்தியது. பெஷாவர் சதி வழக்கு, கான்பூர் சதி வழக்கு, மீரட் சதி வழக்கு ஆகியவை தொடுக்கப்பட்டன. சம்மந்தப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு நீண்ட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பரந்த காங்கிரஸ் இயக்கத்தில் பணியாற்றிய கம்யூனிஸ்டுகள் மட்டுமே முழு சுதந்திர கோரிக்கையை எழுப்பினர். இடதுசாரிகள் மற்றும் முற்போக்காளர்களின் அழுத்தம் காரணமாக காங்கிரஸ் தலைமை இறுதியில் முழு சுதந்திரம் கேட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, 1930-ல் சுதந்திரப் போராட்டத்தின் இரண்டாவது முக்கியமான கட்டம் ஆரம்பித்தது. தண்டி உள்ளிட்ட இடங்களில் உப்பு சத்தியாகிரகம் நடத்தப்பட்டு சுதந்திரப் போர் உத்வேகம் பெற்றது. 1931 மார்ச் 23-ல் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் தூக்கிலிடப்பட்டது இளைஞர்கள் மத்தியில்





எழுச்சி ஏற்பட்டது. சோஷலிசப் புரட்சிக்கு அறைகூவல் விடுத்த பகத்சிங்கின் மரண சாசனம் பெரும் முக்கியத்துவம் பெற்றது. சுதந்திரத்திற் காகப் போரிடவும், ஒரு சோஷலிசப் புரட்சிக்காக வும் மக்களைப் பங்கேற்கச் செய்வதன் அவசி யத்தை அவரது மரண சாசனம் வலியுறுத்தியது. காந்தி இர்வின் ஒப்பந்தத்தை அடுத்து ஒத்துழை யாமை இயக்கம் திரும்பப் பெறப்பட்டது.

1929-33-ல் ஏகாதிபத்திய உலகம் திணறிக் கொண்டிருந்தது. ஒத்துழையாமை இயக்கம் திரும்பப் பெறப்பட்டதால் ஏற்பட்ட நம்பிக்கை யின்மை, சோஷலிசத்தின் தாக்கம் ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து, தெளிவான இடதுசாரி திருப்பத்தை ஏற்படுத்தி யது. தேசிய இயக்கத்தைத் தீவிரப்படுத்தியது.

1920-லேயே அனைத்திந்திய தொழிற்சங்க காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இத்தகைய வர்க்க மற்றும் வெகுஜன அமைப்புகள் தேசிய விடுதலை இயக்கத்திற்குக் கூடுதல் பலத்தை அளித்ததோடு காங்கிரஸ் கொள்கைகளிலும் செல்வாக்கு செலுத்த ஆரம்பித்தன. 1936ல் ஜவஹர்லால் நேரு காங்கிரஸ் தலைவரானார். அவரும் சோஷலிச முழக்கத்தை பிரபலமாக்கி னார். இவ்வாறு சுதந்திரப் போராட்டத்தின் உள்ளடக்கம் விரிவடைகிறது.

1940 அக்டோபரிலிருந்து காங்கிரஸ் தனிநபர் சத்தியாகிரகத்தைத் துவக்கியது. 1941 மத்தியில் 20,000 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். காந்தியவாதிகளி லிருந்து கம்யூனிஸ்டுகள் வரை அனைத்து தேசியவாதிகளும் அதில் இருந்தனர். ஆனால் ஊதிப் பெரிதாகக் காட்டப்பட்ட ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் அதில் இல்லவே இல்லை. இதுதான் கோல்வால்கர் மற்றும் அவரது தொண்டர்களின் தேசபக்தி.

பிறகு 1942 ஆகஸ்ட் 9ல் 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் அனைத்து காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். இது நாடு முழுவதும் மக்கள் எழுச்சிக்கு இட்டுச் சென்றது. அதைத் தொடர்ந்து அரசு கடும் அடக்குமுறையை ஏவியது. அரசின் கணக்குப்படியே நாடு முழுவதும் 10,600 பேர் துப்பாக்கிச் சூட்டில் பலியாயினர்.

1945-ல் இந்திய தேசிய ராணுவத்தின் கைதிகளுக்கு ஆதரவாகவும், 1946 முற்பகுதியில் ராயல் இந்திய கப்பற்படை எழுச்சிக்கு ஆதரவாகவும் ஏற்பட்ட எழுச்சியில் ஆர்.எஸ்.எஸ். எங்கும் காணப்படவில்லை.

1947 ஆகஸ்ட் 15-ல் இந்தியா விடுதலை பெறுவதையே மற்ற பிரிட்டிஷ் விசுவாசிகளைப் போல கோல்வால்கர் நம்ப மறுத்ததாக தமது ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கில் எழுதியுள்ளார். அவர்களைப் போலவே அவர் "அவர்கள் அரசைக் கொடுத்துவிட்டுச் செல்லும் பேதைகள். இரண்டு மாதங்களுக்குக் கூட ஆள முடியாது. கூப்பிய கைகளுடன் பிரிட்டிஷாரிடம் தவழ்ந்து சென்று தயவுசெய்து திரும்பி வாருங்கள் என்று அவர்கள் கூறுவார்கள்" என்று கூறினார்.

1946 இறுதியிலும் 1947-லும் நாட்டில் பரவிய கலவரங்களில் முஸ்லிம்களைக் கொல்லுமாறு வெளிப்படையான அறைகூவல் விடுத்தது ஆர்.எஸ்.எஸ். எங்கெல்லாம் படுகொலை

நடந்தனவோ அங்கெல்லாம் ஆர்.எஸ்.எஸ்.ஸின் பெயர் அடிக்கடி உச்சரிக்கப்பட்டது. விடுதலைக் குப்பின் சில மாதங்களில் ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு எதிராக 600-700 வழக்குகள் பதியப்பட்டன. 1947 டிசம்பர் 7-8 தேதிகளில் கோல்வால்கர் தில்லியில் கூட்டங்கள் நடத்தினார். அவற்றில் சுதந்திர இந்தியாவின் அரசு 'இந்தியரல்லாது' இருப்ப தாகவும் சாத்தானாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டி முஸ்லிம்களுக்கு எதிராக 'கொரில்லாப் போர்' நடத்த அழைப்பு விடுத்தார். சங் பாகிஸ்தானை அழிக்கும் என்றும் வழியில் யாராவது வந்தால் அவரையும் அழித்துவிடும் என்றும் அவர் கூறினார்.

1947 டிசம்பர் 8ல் கோல்வால்கர் கூறிய வார்த்தைகள்:-

".......யாராவது ஆர்.எஸ்.எஸ். வழியில் நின்றால் அவர்களையும் அழித்துவிடுவார்கள்" அந்த 'யாராவது' என்பது மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. தளராமல் மனிதாபிமானத்துக்காகப் போராடிய அவர் ஜனவரி 13 முதல் 18 வரை தில்லியில் அமைதிக்காக உண்ணாவிரதம் இருந்தார். தில்லியில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் மகாசபையினரும் பொதுக் கருத்தின் புதிய திருப்பத்தின் அடிப்படையில் 'அனைத்து வகுப்பினருக்கிடையில் அமைதி, ஒற்றுமை, மற்றும் சகோதரத்துவத்துக்கான' ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டி வந்தது. அது நடந்தால்தான் காந்தி தமது உண்ணாவிரதத்தைக் கைவிடுவார். ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. 1948 ஜனவரி 30 அன்று காந்தி ஆர்.எஸ்.எஸ்.ஸின் முற்கால சுயம்சேவக்கும், வி.டி.சாவர்க்கரின் சீடருமான நாதுராம் கோட்ஸேயால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1948 பிப்ரவரி 4 அன்று இந்திய அரசு ஒரு அதிகாரப்பூர்வ அறிவிப்பில் கூறியது. "ஆர்.எஸ்.எஸ்.ஸின் உறுப்பினர்கள் வன்முறை, திருட்டு, கொள்ளை கொலைகளில் ஈடுபட்ட தாகக் கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் சட்ட விரோதமாக ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் சேகரித்துள்ளனர். எனினும் மறுக்கத்தக்க ஆபத்தான செயல்பாடுகள் தடையின்றித் தொடர்ந்து சங்கின் (ஆர்.எஸ்.எஸ்) செயல்பாடுகளால் துவக்கி ஊக்குவிக்கப்பட்ட வன்முறை பலரை பலி வாங்கியுள்ளது."

இவ்வாறு இந்தியச் சுதந்திரப் போரில் தேச துரோகிகளாகத் திகழ்பவர்கள் ஆர்.எஸ்.எஸ்



மற்றும் சங் பரிவாரத்தினர். ஆனால் இந்நாட்களில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் மமதையுடன் அவர்களுக்கு எதிராகப் பேசினாலும், இயங்கி னாலும் தேச துரோகிகளாக தூற்றுகின்றனர்.

தியாகத்தில் விளைந்த இந்தியச் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாப்பதும் அடுத்த கட்டத்திற்கு சுதந்திரத்தைக் கொண்டு செல்ல வேண்டியதும் காலத்தின் அவசியம்.

**- பெரணமல்லூர் சேகரன்**




18.7.2018 அன்று பல்லடம், உடுமலைப் பேட்டையில் உள்ள மதுரா ஹோட்டல் கூட்ட அரங்கில் திருப்பூர் மாவட்ட பிரதிநிதித்துவப் பேரவை மாவட்டத் தலைவர் ஆர்.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. மாநில துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன் நிறைவுரை யாற்றினார்.

# 14.7.18 மற்றும் 15.7.2018 அன்று விஜயவாடாவில் நடைபெற்ற AISGEF தேசிய செயற்குழுவில் முன்வைக்கப்பட்ட மகளிர் அறிக்கை

கடந்த தேசிய செயற்குழுவிற்கு பிறகு தமிழ்நாட்டில் உழைக்கும் வர்க்கம் மற்றும் அரசு ஊழியர் - ஆசிரியர் சார்பாக நடைபெற்ற இயக்கங்களும், அதில் பெண் அரசு ஊழியர் களின், ஆசிரியர்களின் பங்கேற்பும், உழைக்கும் வர்க்கத்தின் போராட்டங்களில், விவசாயிகளின் போராட்டங்களில் பெண்கள் பங்கேற்பும் முதன்மையானதாக அமைந்துள்ளது. இதே காலகட்டத்தில் தமிழக அரசின் கேளாத் தன்மையும் அதிகமாகியுள்ளது.

தமிழகத்தில் ஜாக்டோ-ஜியோவின் கூட்டமைப்பு முடிவின்படி புதிய பென்சன் திட்டம் ரத்து செய்வது உள்ளிட்ட கோரிக்கை களை வலியுறுத்தி தொடர் இயக்கம் கண்டு வருகிறோம். அதில் கடந்த 21.2.2018 முதல் 24.2.2018 வரை நடைபெற்ற தொடர் மறியல் போராட்டத்தில் 24.2.2018 அன்று பெண்கள் தலைமையேற்று மறியல் போராட்டத்தினை சக்தியாக நடத்தியது வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டமாகும்.

அன்றைய தினம் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் பெண் ஆசிரியர், அரசு ஊழியர்களின் திண்மையான போராட்டத்தால் சென்னை குலுங்கியது. காவல் துறை தவியாய் த தவித்தது. அன்றைய தினம் பாரத பிரதமர் மோடி அவர்கள் சேப்பாக்கம் கலைவாணர் அரங்கில் மானிய விலையிலான இரு சக்கர வாகனம் வழங்கும் விழாவுக்கு அவ்வழியாகத்தான் வரவேண்டிய ஏற்பாடுகள், பெண் ஊழியர்கள் ஒருமித்த குரலாய் எங்களின் அந்திமகால பென்சனை தர மறுக்கின்ற மோடியை இன்று இந்த இடத்தில் சந்திப்பது என்ற முழக்கமும், காவல் துறையினரையும் கலங்க வைத்த போராட்டம் என்பால் ஒரு வீர சரித்திரத்தை பெண் ஊழியர்களும், ஆசிரியர்களம் படைத்தனர்.

## AISGEF சென்னையில் 16வது தேசிய மாநாடு

ஏப்ரல் 5 முதல் 8 வரை தமிழகத்தில் நடைபெற்ற தேசிய 16வது மாநாட்டில் 150-க்கும் மேற்பட்ட பெண் தொண்டர்கள் தேர்வு செய்யப்பட்ட 4 நாட்களும் இந்தியா முழுவதும் இருந்து வந்த பிரதிநிதிகளை வரவேற்று இரவு பகலாக அனைத்து குழுக்களிலும் இணைந்து மாநாட்டு பணியாற்றியது எங்களுக்கு மேலும் உற்சாகத்தை அளித்துள்ளது.

மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற மகளிர் அரங்கும், அதில் கருத்துரையாளர்கள் வழங்கிய கருத்துக்களும் பல்வேறு மாநிலங்களில் இருந்து விவாதத்தில் பங்கேற்ற பெண் தோழர்களின் விவாதங்களும் எங்கள் மாநில பெண் ஊழியர் களுக்கு மேலும் உத்வேகமாய் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. தமிழ்நாட்டில் 33 மாவட்டங்களிலும் அரசு ஊழியர் சங்கம் செயல்பட்டு வருகின்றன. அதில் மாவட்டச் செயலாளராக ஒரு பெண் தோழர் சிறப்புடன் செயல்பட்டு வருகிறார். மாநில செயற்குழு உறுப்பினராகவும், வட்டக்கிளை தலைவர் களாகவும், செயலாளர்களாகவும் பல பெண் தோழர்களின் பணி சிறப்புடையதாகும்.

## 8.5.2018 கோட்டை முற்றுகை

ஜாக்டோ-ஜியோ உயர்மட்டக் குழுவின் முடிவின்படி ஊழியர்களை தயார்படுத்தும் நோக்கில் நடைபெற்ற வாகன பிரச்சாரம் நடைபெற்றது. இந்நிலையில் கோட்டை முற்றுகை போராட்டம் நடைபெறுவதற்கு 2 நாட்களுக்கு முன்னரே மாவட்டங்களில் 500-க்கும் மேற்பட்ட தலைவர்களை காவல் துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்து பொய் வழக்கு போட்டனர். பெண் தலைவர்கள் கிடைக்காத பட்சத்தில் அவர்களின் கணவர்கள், குழந்தைகளை மிரட்டுவது, காவல் துறை வாகனத்தில் ஏற்றி அலைகழிப்பது போன்ற அநாகரிகமான நிகழ்வுகளை தமிழக அரசு அரங்கேற்றியது.

போராட்டத்திற்காக முன்பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களை காவல் துறை மிரட்டி வாகனத்தை சென்னை நோக்கி செல்ல முடியாமல் தடுத்து

நிறுத்தினர். தடுத்தி நிறுத்தி கைது செய்யப்பட்ட நிலையிலும் பெண்கள் போராட்டத்தை அந்த இடத்திலேயே தொடர்ந்தது என்பது போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

அத்தனை தடைகளையும் உடைத்தெறிந்து புறப்பட்டு வந்த தோழர்களை டோல்கேட், ரயில் நிலையம், பேருந்து நிலையத்தில் தீவிரவாதிகளை சுற்றி வளைப்பது போல சுற்றி வளைத்து கைது செய்து மண்டபங்களில் அடைத்து வைத்தனர்.

ஜம்மு-காஷ்மீர் எல்லையை முள்வேலி போட்டு சுற்றி பாதுகாப்பது போல சென்னை தலைமைச் செயலகத்தை சுற்றி இதுவரை இல்லாத அளவில் முள்வேலியிலான தடுப்பு சுவர்களை ஏற்படுத்தி தடைகளை உருவாக்கியிருந்தனர். மேற்கூறிய அத்துணை தடைகளையும் துச்சமென மதித்து சென்னை கோட்டை முற்றுகை போராட்டத்தில் 25,000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அதில் 10,000-க்கும் அதிகமான பெண் ஊழியர்களும், ஆசிரியர்களும் பங்கேற்று தமிழக அரசை கலங்க வைத்த போராட்டமாக இருந்தது. அரசு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகள் தீர்க்க முன்வராத நிலையில்,

11.6.2018 முதல் 13.6.2018 வரை ஜாக்டோ-ஜியோ சார்பாக நடைபெற்ற காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் (ஒருங்கிணைப்பாளர்கள் + உயர்மட்டக் குழுத் தலைவர்கள் 110 பேரில்) 10-க்கும் மேற்பட்ட பெண் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் பங்கேற்றனர். அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களும் நேரில் வந்து ஆதரவு தெரிவித்தனர். 12.6.2018 அன்று எதிர்க்கட்சித் தலைவர் ஜாக்டோ-ஜியோ உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக சட்டமன்றத்திலேயே கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து 5 அம்ச கோரிக்கைகள் தொடர்பாக தெளிவாக எடுத்துரைத்தார்.

ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் செவிலியர்களை நிரந்தரம் செய்யக் கோரி நடைபெற்ற சென்னை காத்திருப்புப் போராட்டத்தில் துறை நிர்வாகமும், தமிழக அரசு, அலுவலக வளாக கேட்டை பூட்டியும், பெண்களை மிரட்டியும், இயற்கை உபாதை கழிக்கச் செல்லும் டாய்லெட்டை பூட்டியும், தண்ணீர், மின்சாரத்தை நிறுத்தினாலும் 3 நாட்கள் உட்கார்ந்த நிலையில் நடத்திய போராட்டம் தற்போது "சம வேலைக்கு சம ஊதியம்" என்ற அரசாணை பெற காரணமாகவும், சிலரை நிரந்தரப்படுத்தவும் செய்துள்ளது என்றால் அது மிகையாகாது.

ஊரக வளர்ச்சித் துறையில் ஊராட்சி செயலாளர்களை நிரந்தரப்படுத்தவும், இளநிலை உதவியாளர்களுக்க உண்டான ஊதியம், பென்சன் வழங்கக் கோரி நடைபெறும் தொடர் போராட்டங்களும், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடியில் முழு அளவில் பெண் ஊழியர்கள் பணியாற்றும் நிலையில் 35 ஆண்டுகளாக தொடர் இயக்க நடவடிக்கைகளிலும் வீறுகொண்ட போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர். இருப்பினும், உழைப்புச் சுரண்டலை மட்டுமே ஆதரிக்கும் அரசில் மாதம் ரூ.5000 ஊதியம் பெறும் மருத்துவமனை ஊழியர்களும், ஆஷா ஊழியர்களும் பணிகளில் உள்ள நிலையை இந்த தேசிய செயற்குழுவின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் "மக்களை நோக்கிய பயணமாக" புயல், பூகம்பம், வெள்ளம், இரத்த தானம், பயிற்சி வகுப்பு உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளிலும் மக்களை நோக்கி பயணிக்கும் விதமாக தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்று அந்த மாவட்ட மக்கள் 99 நாட்கள் போராட்டம் நடத்திய நிலயில் கடந்த 22.5.2018 அன்று அதாவது 100வது நாளில் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளிக்க பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் ஊர்வலமாக சென்ற அப்பாவி மக்களை பயங்கர வாதிகளை சுட்டுத் தள்ளுவது போல் காவல் துறையினர் குறி வைத்து சுட்டுத் தள்ளினர். இதில் 13 அப்பாவி பொதுமமக்கள் உயிரிழந்த சம்பவம் தேசத்தை உலுக்கியது. இதில் 16 வயது ஸ்னோலின் என்ற மாணவி வாயில் சுடப்பட்டு இறந்தார். கார்ப்பரேட்டுகளுக்காக சொந்த மக்களையே காவு கொடுக்கும் தமிழக அரசின் கொடும் முகம் கண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 24.5.2018 அன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மக்கள் அதிகளவில் கூடும் பேருந்து நிலையங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் அதிகளவில் பெண் ஊழியர்கள் பங்கேற்பை செய்தனர்.

8 வழி பசுமைச் சாலை என்று சொல்லும் திட்டத்தை எதிர்த்து பாதிக்கப்படும் விவசாயிகள், பொதுமக்கள் என்று பல பிரிவு போராட்டக் களத்திலும் பெண்களின் பங்கேற்பு தமிழகத்தில்

கூடிவரும் நிலை உள்ளதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக முன்வைக்கின்றோம்.

தமிழ்நாட்டில் 10 பெண் தோழர்களைக் கொண்ட மாநில மகளிர் துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்ச்செல்வி மாநில மகளிர் துணைக் குழுவின் கன்வீனராக செயல்பட்டு வருகிறார். மாவட்ட மகளிர் துணைக் குழு அமைக்கப்பட்டு மாநில செயற்குழுவுக்கு பங்கேற்பும் உள்ளது.

தமிழகத்தை சேர்ந்த மாநிலச் செயலாளர் தோழர் டி.கலைச்செல்வி AISGEF-ன் இணை கன்வீனராக தேர்வு செய்யப்பட்டுள்ளது சிறப்பானதாகும்.

இந்த ஆண்டின் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம் அன்று அனைத்து மாவட்ட மையங்களும் 2 தீர்மானங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் கோரிக்கைகளை வடிவமைத்து அனைத்து மாவட்டங்களும் மாவட்ட ஆட்சியரை சந்தித்து "கோரிக்கை மனு கொடுப்பது" என்ற முடிவு நிறைவேற்றப்பட்டது.

**கோரிக்கைகள்**

1. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் பதவி நீண்ட காலமாக நிரப்பப்படாமல் தலைவர் இல்லா மகளிர் ஆணையமாக செயலற்று முடங்கிக் கிடந்த நிலையில் தற்போது கண்ணகி பாக்கியநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

2. தமிழகத்தில் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட துறைத் தலைவர் அலுவலகங்களில் விசாகா கமிட்டியை உடன் அமைத்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வரும் 21.7.2018, 22.7.2018 ஆகிய இரு தினங்கள் "மாநில பிரதிநிதித்துவப் பேரவை" மதுரையில் நடைபெறவுள்ளது. இதில் 100-க்கும் மேற்பட்ட பெண் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

"பெண்கள் பங்கேற்காத எந்தப் போராட்டமும் முழு அளவில் வெற்றி பெற்றதாக வரலாறுகள் இல்லை".

இந்நிகழ்வை நினைவிலேந்தி ஸ்தாபன நடவடிக்கைகளில் முன்னேறிச் செல்வோம்.

AISGEF அறைகூவல் விடுக்கும் அனைத்து இயக்க நடவடிக்கையிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் முன்னெடுத்து செல்வதுடன் பெண் அரசு ஊழியர்களை அதிகமாக அணிதிரட்ட மாநில மைய முயற்சியுடன் செயல்படுவோம். வாய்ப்புக்கு நன்றி.

- **எஸ்.தமிழ்ச்செல்வி**

# வாசகர் கடிதம்

கடந்த இதழில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஜூலை மாதம் தலையங்கம் படித்தேன். ஆம் தேச விடுதலை தினம் 15.8.1047 கோல் அரசு ஊழியர்களின் வரலாற்றில் 1.7.2003 போராட்டம் மறக்க முடியாத வரலாற்று போராட்டமாகும். சர்வதேச அளவில் தொழிலாளி வர்க்கத்தை திரும்பிப் பார்க்க வைத்த போராட்டமாகும். டிஜிட்டல் மயம் நவீன இயந்திரமயமாக்கல் மனித வேலைகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளே. முதலாளித்துவம் தொழிலாளர் வர்க்கத்தின் மீது தொடுக்கப்பட்டு வரும் தீவிரமான தாக்குதலே டிஜிட்டல் மயம். இது குறித்த ஒரு சரியான கட்டுரை எழுதியது பாராட்டுக்குரியது. பெண்கள் மென்மையானவர்கள் அல்ல. திண்மையானவர்கள் என்று குறிப்பிடப்பட்ட கட்டுரையும் மிகவும் சிறப்பாக இருந்தது. மொத்தத்தில் இந்த இதழில் வெளியிட்டிருந்த அனைத்து கட்டுரைகளும், தகவல்களும் மிகவும் சிறப்பாக இருந்தது.

- **சீனி.மணி,**
பூந்தோட்டம்

முன் அட்டைப் படம் ஜாக்டோ-ஜியோ தலைவர்களின் வீரம் செறிந்த போராட்டத்தினை விவரித்தது. ஐஏஎஸ் கனவுகளின் மீது தாக்குதல், ஆன்லைன் மூலம் கருவூலக் கணக்குத் துறை அலுவலகம் காணாமல் போகும், தோழர் ஏ.கே.பத்மநாபன் எழுதிய கட்டுரை மற்றும் தோழர் சுகுமால்சென் எழுதிய கட்டுரைகள் படித்தேன். பொதுவாக இந்த மாத இதழில் வெளிவந்த அனைத்து கட்டுரைகளும், தகவல்களும் மிகவும் சிறப்பாக இருந்தது. இதுபோல் வெளிவர முயற்சிக்க வேண்டுகிறோம்.

- **நா.தட்சிணாமூர்த்தி,**
கடலூர்

## போராட்டங்களைத் தூண்டுகிறார்கள்

# ஹெச்.எம்.களுக்கு ரூ.82 ஆயிரம் சம்பளம்

# பி.இ.படிச்சவன் ரூ.50 ஆயிரம் தாண்டலே

### அரசு ஊழியர்களை திட்டித் தீர்த்த முதல்வர்

சேலத்தில் நடந்த அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அரசு ஊழியர்கள் குறித்து முதல்வர் எடப்பாடி பழனிசாமி பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க கடந்த இரு தினங்களுக்கு முன்பு சேலம் வந்தார். நேற்று முன்தினம் சேலம் புதிய பஸ் நிலையம் அருகே உள்ள கட்சி அலுவலகத்தில் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்திற்கு ஊடகங்கள் எதுவும் அனுமதிக்கப்படாத நிலையில், முதல்வர் பேசிய ஆடியே வாட்ஸ்-அப்பில் வைரலாகி வருகிறது. இதில் அரசு ஊழியர்கள் குறித்து முதல்வர் பேசியிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. கூட்டத்தில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி பேசியிருப்பது:

இந்தியாவிலேயே அதிக போராட்டம் நடந்த மாநிலம் தமிழ்நாடுதான். என்னென்னவோ போராட்டம் நடத்தி இந்த ஆட்சியை கலைக்கப் பார்த்தாங்க. இந்த கட்சி மீது களங்கம் கற்பிக்க பார்த்தாங்க. அத்தனையும் சரியான முறையில் கையாண்டு சரியான நிவாரணம் வழங்கி திருப்திப்படுத்தி இருக்கின்றோம். அரசு ஊழியர்கள் நல்லா சிந்தித்து பாருங்க. இன்று ஆரம்பப் பள்ளியில் ஹெட்மாஸ்டர்களாக இருப்பவர்களுக்கு எவ்வளவு சம்பளம் தெரியுமா? 82 ஆயிரம் ரூபாய். ஐந்தாம் கிளாஸ் ஹெட்மாஸ்டருக்கு 82 ஆயிரம் ரூபாய். நம்ம பையன் பி.இ. கஷ்டப்பட்டு படித்து பத்து வருடம் கழித்தாலும் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் தாண்ட மாட்டான். இதேபோல் ஆசிரியர்களுக்கு 100 நாள் லீவு கிடைக்கிறது. எட்டாம் வகுப்பு வரை படித்தாலும் சரி, படிக்காவிட்டாலும் சரி, பாஸ், பெயிலே கிடையாது. அப்படியே விட்டுருவான். இவ்வளவு பணத்தையும் வாங்கிக்கொண்டு போராட்டம் நடத்துகின்றனர்.

கடந்த ஆண்டு அரசு ஊழியர்களுக்கு மட்டும் ரூ.14 ஆயிரத்து 819 கோடி சம்பள உயர்வாக கொடுக்கப்பட்டுள்ளது. 7வது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி நம்முடைய அரசு இவ்வளவு பணத்தை கொடுத்துள்ளது. இது கடுமையான சம்பள உயர்வு. 35 ஆயிரம் வாங்குனவன் இப்போ 60 ஆயிரம் வாங்குறான். எங்க பி.ஏ. எல்லாம் 60 ஆயிரம் வாங்கிட்டு இப்ப 1 லட்சத்து 10 ஆயிரம் வாங்குறாங்க என பிஏ. நாங்கள் 1 லட்சத்துக்கு மேல் வாங்குவோம் என்று நினைத்தே பார்க்கவில்லை என்று சொல்கிறார். 40 ஆயிரம் ரூபாய் அதிகம். இன்னும் எவ்வளவு சேர்த்துக் கொடுப்பது?



எல்லா பணத்தையும் இவர்களுக்கே கொடுத்து விட்டால் மக்களுக்கு என்ன செய்ய முடியும்? இதையெல்லாம் நீங்கள் புரிந்துகொணடு மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்காகவே இதை சொல்கிறேன். அரசின் வரவு-செலவை நான் முதலமைச்சராக இருக்கும் காலத்தில் சொல்கிறன். இன்று நமக்கு 100 ரூபாய் வருமானம் வருகிறது என்றால், அதில் 33 ரூபாயை மட்டுமே மத்திய அரசு நமக்கு தருகிறது. இப்படிடி மத்திய அரசு ஓராண்டுக்கு கொடுக்கும் 33 ஆயிரம் கோடியை வெறும் திட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். வேறு எதற்கும் எடுக்க முடியாது.

மீதி 67 சதவீதம் மாநில வருவாய். அந்த 67 சதவீதத்தில் 61 சதவீதம் அரசு ஊழியர்களுக்கு சம்பளமாக செல்கிறது. 67 ஆயிரம் கோடியில் 61 ஆயிரம் கோடி சம்பளத்திற்கும், பென்ஷனுக்கும் போகிறது. வெறும் 6 ஆயிரம் கோடியை வைத்துக் கொண்டு (6 சதவீதம்) ரோடு போட வேண்டும். தண்ணீர் கொடுக்க வேண்டும். அப்புறம் நீங்கள் சொல்லும் வேமைல எல்லாத்தையும் செய்ய வேண்டும். 61 சதவீதத்தை அரசு ஊழியர்களுக்கும், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கும் நாம் கொடுக்கிறோம். அது மட்டுமில்லை. இந்த 6 சதவீதத்தில் வாங்கிய கடனையும் திருப்பி செலுத்த வேண்டும்.

கந்து வாங்கினால் வாராவாரம் கட்டுவது போல், அரசாங்கமும் கடன் வாங்கியிருக்கு. அதை வாங்கியவர்களுக்கு வட்டியுடன் கரெக்டாக கொடுக்க வேண்டும். அப்போதுதான் மீண்டும் கடன் கொடுப்பார்கள். இப்படிப்பட்ட நிலையில்தான் வேண்டுமென்றே போராட்டங்கள் தூண்டிவிடப்படுகிறது. இவ்வாறு முதல்வர் எடப்பாடி பழனிசாமி பேசியுள்ளார்.

நன்றி : தினகரன், 31.7.2018

# தேங்காய் இனித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற முதல்வர் எடப்பாடியின் கண்ணியமற்ற பேச்சும் செயல்பாடும்!

## கேட்காத கடனும்... தீர்க்காத பழியும்... வீண், வீண், வீணே...!

மாற்றாந்தாய் மனப்பான்மை என்றொரு சொற்றொடர் மக்களுக்கு மட்டுமல்ல மன்னனுக்கும் அவன் ஆளும் மாநிலத்திற்கும் பொருந்தும். இதை நாம் அறிவின் வழி அல்ல, அனுபவத்தின் வழியாக உணரத் தலைப்பட்டிருக்கிறோம். என்னதான் கெட்டவளாக இருந்தாலும் கண்டிப்பானவளாக இருந்தாலும் பெற்றதாய் ஒருபோதும் தன் பிள்ளைகளுக்கு பச்சைத்துரோகம் எண்ணமாட்டாள். பெற்ற தாயை இழந்த மக்கட்கு வேறொரு தாய் வாய்த்தால் அவள் எப்படி எல்லாம் இருப்பாள் என்பதற்கு சேலத்தில் நடந்த அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய முதல்வரின் ஏழு நிமிடப் பேச்சு எடுத்துக்காட்டாகும். தமிழக மக்களின் முழு ஆதரவோடு முதல்வர் ஆகியிருந்தால் அவருக்கு உண்மையான தாய்மனம் இருந்திருக்கும். ஆனால், அதற்கு மாறான வாசல் வழியே வாழ வந்த... குடும்பத்தாரால் அங்கீகரிக்கப்படாத, மூன்றாம்தர செயல்பாடுகளால் குடும்பத்தினரையே கோலோச்சப் பார்ப்பது எப்படி இருக்குமோ, அப்படித்தான் இருக்கிறது முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியின் ஆணவப் பேச்சு.

காமராஜர், அண்ணா போன்ற பெருந்தலைவர்கள் அலங்கரித்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சர்வாதிகாரம் பேசுகிறது. ஜெயலலிதா இம்மாநிலத்தை ஆண்ட காலங்களில் கூட அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் உரிமைகளை பறிக்கப் பார்த்தாரே தவிர அவர்களைப் பழித்துப் பேசியதில்லை. தர மறுத்தாரே தவிர தராதரம் இறங்கிப் பேசியதில்லை. ஒருசில போராட்டங்களுக்குப் பின்னர் ஜெயலலிதா தாய்மனதோடு இறங்கி வந்து உரிமைகளை கொஞ்சமேனும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார். 110 விதியின்கீழ் உறுதிமொழிகள் அளித்திருக்கிறார். ஆனால் இந்திய வரலாற்றில் முதன்முறையாக... ஒரு முதலமைச்சர் தன்கீழ் பணிபுரியும் ஊழியர்களை சகட்டு மேனிக்கு வார்த்தைகளால் தரம்தாழ்ந்து பேசியிருப்பது இதுவே முதல்முறை.

இந்தியாவிலேயே போராட்டங்கள் அதிகம் நடக்கும் மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் இருப்பதாகவும், அதற்குக் காரணம் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள், அரசியல் எதிர்கட்சிகள் என்று தன்னுடைய திறமையின்மையை ரொம்பப் பெருமையாக பறைசாற்றிக் கொண்டிருக்கிறார் முதல்வர் பழனிச்சாமி. ஜெயலலிதா ஆண்ட காலங்களில் போராட்டங்களே நடக்கவில்லையா? அதை அவர் எப்படி கையாண்டார்? முதல்வர் எப்படி கையாள்கிறார்? ஜெயலலிதா போராட்டத்தின் உக்கிரத்தைப் பார்த்து ஏதாவது அறிவிப்பு அல்லது அரசாணை வெளியிடுவார். ஆனால் பழனிச்சாமியோ பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி நீ எத்தனை போராட்டம் வேணாலும் நடத்திக்கோ நான் ஒண்ணுத்தையும் கேக்கமாட்டேன் என்றால், தாங்கள் தாங்கியிருக்கும் மன்னன் என்ற மணிமகுடம் தலையோடு மண்ணில் உருளப் போகிறது என்று பொருள்.

போராடுபவர்கள் எல்லாம் அரசியல் கட்சியினரும், ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் மட்டுமே என்று சொல்லும் எடப்பாடிக்கு ஒரு கேள்வி. மக்கள் யாருமே உங்களுக்கு எதிராக போராட்டம் நடத்தவில்லையா? ஜல்லிக்கட்டு தொடங்கி ஹைட்ரோ கார்பன், நியூட்ரினோ, காவிரி போராட்டம், விவசாயிகள் போராட்டம், ஜாக்டோ-ஜியோ போராட்டம், மருத்துவ மாணவர்கள் போராட்டம், ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டம் போன்றவை எல்லாம் கூட திமுக, பாமக, மார்க்சிஸ்ட் கட்சியினர் நடத்தியவையா எட்டுவழி நாயகரே?

தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ரூ.82000 ரூபாய் சம்பளம் வாங்குவதாகவும், பொறியியல் படித்த நம்ம பையன் ரூ.50,000/-ஐ பத்து வருஷம் ஆனாலும் தாண்டறதே கஷ்டம் என்றும் பேசிய முதல்வர் எடப்பாடி, நல்ல வேளை எல்லா பசங்களையும் வாத்தியார் வேலைக்கு போகச் சொல்லாமல் விட்டுவிட்டது ஆச்சர்யம்தான். ஆசிரியரை விட அதிக படிப்பு படித்த பொறியாளர்கள் அவர்களை விட குறைந்த ஊதியம் பெறுவதாக கூறிய முதல்வர், எம்.எல்.ஏ.க்களுக்கு ரூ.1,10,000/-ஐ தொகுதி பக்கமே வராம அஞ்சு வருஷத்துக்கு சுளையா வாங்கறதையும், அடுத்தமுறை எம்எல்ஏ ஆனாலும் ஆகாவிட்டாலும் பென்ஷன் வாங்கப் போறதையும் சொல்லாமல் விட்டுவிட்டது ஆச்சர்யமும் இல்லை; அதிசயமும் இல்லை, அரசியல்.

ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைப்படி ரூ.14,719/- கோடியை சம்பள உயர்வாக வாரி வழங்கியதாக சொல்லும் முதல்வர் எடப்பாடி, அவ்வளவு கொடுத்தும் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் அதுவும் போதலைன்னு போராட்டம் நடத்துறாங்கன்னு புளுகுமூட்டையை அவிழ்த்து விட்டிருக்கிறார். ஐயா முதல்வர் எடப்பாடி அவர்களே, நீங்க கொடுத்ததாக சொல்லும் ரூ.14,719/- கோடி நீங்க கொடுத்தது இல்லை. அது நாங்க போராடி உங்களை நீதிமன்றத்திற்கு வரவழைத்து வாங்கியது. 21 மாத கால போராட்டத்துக்குப் பிறகு நீதிமன்ற உத்தரவின் பேரில் உங்களை சம்பள உயர்வு கொடுக்க வைத்தது எங்கள் போராட்டமும், அதன் காரணமாக எழுந்த நீதிமன்றத் தலையீடும் தான். அதிலும் நீங்கள் ஆதாயம் தேடும் வகையில் ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி கொடுத்ததாகச் சொல்வது உலகமகா ஆணவமாகும். 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை வழங்க மறுத்தது கயமைத்தனம். அதேசமயம் எந்தப் போராட்டமும் நடத்தாத, இருக்கற பணத்தையே என்ன பண்றதுன்னு தெரியாம அல்லாடிக் கொண்டிருக்கும் ஆளும் கட்சி எம்.எல்.ஏக்களை திருப்திப்படுத்த அனைத்து எம்.எல்.ஏக்களுக்கும் கேட்காமலேயே 110 சதவீத ஊதிய உயர்வு வழங்கியது சுத்த நயவஞ்சகத்தனம்.

“என்னென்னவோ போராட்டம் நடத்தி இந்த ஆட்சியை கலைக்கப் பார்த்தார்கள். களங்கம் கற்பிக்கப் பார்த்தார்கள். அத்தனையும் சரியான முறையில் கையாண்டு சரியான நிவாரணம் வழங்கி திருப்திப்படுத்தியிருக்கோம்'' என்று சொல்லியிருக்கிறார் எடப்பாடி. சரியான முறையில் எதைக் கையாண்டார்? யாருக்கு என்ன நிவாரணம் வழங்கி திருப்திப்படுத்தினார் இவர்? அவருடைய பேச்சிலேயே அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார். எதன் காரணமாக இந்த ஆட்சி நீண்டு கொண்டிருக்கிறது என்பது ஊரறிந்த ரகசியமாயிருக்கிறது. கோமா நிலையில் இருக்கும் ஒரு அரசாங்கத்திற்கு, மேலே இருந்து ஒருவர் ஆக்சிஜன் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஆட்சி ஒரு வருடத்திற்கும் மேலாக உயிரோடு இருக்கிறது. இதைத்தான் உலக மகா சாதனையாக எடப்பாடியும், அவரது சகாக்களும் கொண்டாடுகிறார்கள்.

சென்ற முறை அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியபோது அமைச்சர் ஜெயக்குமார், அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களுக்கு சம்பளமாக அரசின் வருவாயிலிருந்து 70 சதவீதம் வரை செலவழிக்கப்படுவதாக பத்திரிகைகளில் காசு கொடுத்து விளம்பரமே கொடுத்திருந்தார். ஆனால் இப்போதோ எடப்பாடி அதை 61 சதவீதமாக குறைத்து கூறியுள்ளார். இந்த அமைச்சர்களின் பேச்சு ‘இன்றைய தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரத்தை’த்தான் ஞாபகப்படுத்துகிறது. இவர்கள் எல்லாம் எந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியிடம் கணக்குப் படிக்கிறார்கள் என்று தெரியவில்லை. வாய்க்கு வந்ததை எல்லாம் பொய்யாக்கியே தீருவோம் என்று சூளுரைத்துப் பேசுகிறார்கள். நாளொரு மேடை, பொழுதொரு நடிப்பு அதன்பேர் அதிமுக அமைச்சரவை என்றாகி வருவதை தமிழகம் தினந்தோறும் கண்டு வருகிறது.

முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு தைரியமிருக்குமேயானால், போராட்டம் நடத்துகிறவர்கள் எல்லாம் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் மற்றும் கட்சிக்காரர்கள்தான் பொதுமக்கள் இல்லை என்று சவால் விடுப்பாரேயானால், இந்த ஆட்சியில் மக்கள் பிரச்னைகள் தீர்க்கப்பட்டு அவர்கள் சுபிட்சமாக இருக்கிறார்கள் என்று அவர் உறுதி கூறுவாரேயானால், இந்த அமைச்சரவையைக் கலைத்துவிட்டு தேர்தலில் போட்டியிட்டு வென்று காட்ட வேண்டும். குறைந்தபட்சம் உள்ளாட்சித் தேர்தலைக்கூட நடத்த திறமையற்றவர்களாக இருக்கிறீர்கள். எட்டுவழிச் சாலை போட காட்டும் ஆர்வத்தை மற்ற விஷயங்களில் காட்டாததிலிருந்து நீங்கள் செய்யும் ஆட்சி என்னவென்று மக்களுக்கு நன்றாகவே புரிந்துள்ளது. மணல் கொள்ளை, அரிசி கொள்ளை, காண்டிராக்ட் கொள்ளை, அமைச்சர்கள் வீட்டில் ரெய்டு, தலைமைச் செயலாளர் வீட்டில் ரெய்டு என்று மக்கள் பணத்தை கோடிக்கணக்கில் கொள்ளை என ஏராளமான ஊழல் மயம் கொண்டவர்கள், நேர்மையாக மக்கள் பணி செய்து நிர்வாகத்தை திறம்பட நடத்த ஏதுவாக இருக்கும் அரசு ஊழியர்கள் மீதும், பள்ளிக்கூட அறையில் நாளைய சமுதாயத்தை நல்லதொரு சமுதாயமாக உருவாக்க உழைக்கும் ஆசிரியர்கள் மீதும் சேற்றை வாரி இரைத்திருப்பது, சொந்த செலவில் சூனியம் வைத்துக் கொண்டதற்கு ஒப்பாகும்.

எடப்பாடி பழனிச்சாமி எப்படிப்பட்ட ஆசாமி என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவர் வகிக்கும் முதல்வர் என்ற உன்னதமான பதவியின் மாண்பை காக்கவாவது, தான் பேசிய பேச்சுக்கு அவர் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும். அவர் மன்னிப்பு கேட்டாலும் மன்னிப்பு கேட்கா விட்டாலும் அரசு ஊழியர்களும்-ஆசிரியர்களும் இனி அவரை மன்னிப்பதாக இல்லை. இருக்கும் நாற்காலியிலிருந்து அவரை அகற்றும் வரை பகை முடிக்கும் பணி முடிக்க அரசு ஊழியர்-ஆசிரியர் படை திரளும் மக்கள் புடைசூழ!

**கேட்காத கடனும்... தீர்க்காத பழியும்... வீண், வீண், வீணே...!** ❖

# நவ.15 அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்க அரசு ஊழியர்களுக்கு அழைப்பு

**ந**வம்பர் மாதம் 15-ஆம் தேதி நடைபெற உள்ள அகில இந்திய வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் பங்கேற்று வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவது என தீர்மானித்துள்ளது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலப் பிரதிநிதித்துவப் பேரவை மதுரை திருப்பரங்குன்றத்தில் சனிக்கிழமையன்று தொடங்கியது. இந்தப் பேரவையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கொடியை மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் ஏற்றிவைத்தார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியை மாநிலப் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஏற்றி வைத்தார். அஞ்சலித் தீர்மானத்தை மாநிலத் துணைத் தலைவர் எம்.சுப்பிரமணியன் வாசித்தார். ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநிலச் செயலாளர் மணிமேகலை, ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர் ஜி.வெங்கடேசன், அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாநிலச் செயலாளர் நெ.இல.சீதரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தொடர்ந்து இந்தப் பேரவையில், அரசுத் துறைகளில் அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை அமர்த்துதல், ஒப்பந்த மற்றும் தினக்கூலி வேலைமுறையை ரத்து செய்ய வேண்டும்; அரசுத்துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்; தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்; ஆளும் வர்க்கத்திற்கு தீண்டாமை அதிகாரம் அளிக்கும் விதிகளை ரத்து செய்ய வேண்டும்; விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தி பொது விநியோகத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்; தொழிலாளர் விரோதக் கொள்கைகளையும் திருத்தங்களையும் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்; தேசிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும்; வரையறுக்கப்பட்ட பலன் தரும் ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மேலும் நவம்பர் மாதம் 15ஆம் தேதி நடைபெறவுள்ள அகில இந்திய வேலை நிறுத்தத்தில் தமிழகத்தில் உள்ள மத்திய, மாநில அரசு ஊழியர்கள், பள்ளி - கல்லூரி ஆசிரியர்கள் பெரும் திரளாகப் பங்கேற்கவேண்டுமெனவும் பிரதிநிதித்துவப் பேரவை அழைப்பு விடுத்தது.❖

# மக்களோடு நெருக்கமாக இருந்து பணியாற்றுங்கள் அரசு ஊழியர்களுக்கு உ.வாசுகி அழைப்பு

**த**மிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மக்களோடு நெருக்கமாக இருந்து பணியாற்ற வேண்டுமென அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் துணைத்தலைவர் உ.வாசுகி கூறினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலப் பிரதிநிதித்துவப் பேரவை மதுரை திருப்பரங்குன்றத்தில் சனிக்கிழமை தொடங்கியது. பேரவையைத் துவக்கி வைத்து உ.வாசுகி பேசியதாவது

பேசாதே, போராடாதே என்று இன்றைக்கு ஒரு மினி எமர்ஜென்சி தமிழகத்தில் நிலவுகிறது. ஆனால், இன்றைக்கு பேசுவதற்காகவே, போராடுவதற்காகவே ஒரு பேரவையை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மதுரையில் நடத்திக் கொண்டிருக்கிறது. வில்லாபுரம் வீரத் தியாகி லீலாவதி உள்ளிட்ட பல தியாகிகளைக் கொண்ட மண் மதுரை மண். போராடினால் நாடு சுடுகாடாகி விடும் என்கின்றனர் சிலர். போராடாவிட்டால்தான் நாடு சுடுகாடாகிவிடும். அரசு ஊழியர் என்றால் அரசுக்கு ஊழியம் செய்வதல்ல. மக்களுக்குச் சேவை செய்வதாகும். அரசு ஊழியர்கள் அரசுக்கு அடிமைகளல்ல. தமிழகத்தின் முதல்வராக ஜெயலலிதா இருந்தபோது பல்வேறு உரிமைகளுக்காக அவரிடம் மோதிப் பார்த்த சங்கம் தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். இன்றைக்கு தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் அரசு ஊழியர்கள் எண்ணற்ற போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அதற்கு உதாரணம், சென்னையில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் சென்னை மாநகரமே குலுங்கியது. இதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பங்கு மகத்தானது. இப்போராட்டத்தை தடுக்க தலைமைச் செயலகத்தின் முன்பு முள்வேலி போட வேண்டிய சூழல் காவல்துறைக்கு ஏற்பட்டது. நீதிக்கான

பயணத்தில் ஒரு போராட்டம் தோல்வியடைந்து விட்டால் அதற்காக சோர்வடைந்துவிடக் கூடாது. தோல்விக்கான காரணங்களைக் கண்டறிந்து அதைக் களைந்து முன்னெப்போதையும் விட எழுச்சிமிகு போராட்டங்களை நடத்த வேண்டும். தொடர்ந்து போராடுவதன் மூலமே நாம் நமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும். உரிமைகளைப் பாதுகாக்க முடியும். மக்கள் விரோதக் கொள்கைகளை பின்பற்றி வரும் பாஜக அரசு மத்தியில் உள்ளது. அதன் அடிச்சுவட்டைப் பின்பற்றி தமிழகத்தில் அதிமுக அரசு செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் போராடவே கூடாது, யாரையும் விமர்சிக்கவே கூடாது என்கிறது அரசு. யாரையும் கொள்கைப் பூர்வமாக விமர்சிப்போம், போராடுவோம் என்பதே நமது நிலை. மத்திய அரசும், மாநில அரசும் வளர்ச்சி... வளர்ச்சி... என்கின்றது. வளர்ச்சி அவசியம் தான். அது யாருக்கான வளர்ச்சி, அது யாரை வளர்த்துவிடப் பயன்படுகிறது என்பதுதான் முக்கியம்.

### அழிவின் விளிம்பில் பருத்திக்காடு

சென்னை-சேலம் எட்டுவழிச்சாலைக்காக விளைநிலங்கள் விவசாயிகளின் அனுமதியின்றி கையகப்படுத்தப்படுகின்றன. இந்தச் சாலை அமைப்பதால் ஏற்படும் பாதகமான அம்சங்களை மக்களிடம் எடுத்துச் சொல்வது தவறா? கருத்துச் சொல்லும் உரிமை அனைவருக்கும் உண்டு. இந்த உரிமையை தமிழக அரசு அகராதியிலிருந்து எடுத்து விட்டதா? இம் என்றால் வனவாசம். ஏன் என்றால் சிறைவாசம் என்ற நிலை உள்ளது. எட்டு வழிச் சாலையை எதிர்த்துப் போராடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் டில்லிபாபுவை செங்கம் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் மிகவும் தரக்குறைவாகப் பேசி மோசமாக நடத்தினார். இது வன்மையான கண்டனத்திற்குரியது. எட்டு வழிச் சாலை அமைய உள்ள பகுதியில் பருத்திக்காடு என்றொரு கிராமம் உள்ளது. அந்த கிராமமே அழியும் நிலை உள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்கள் லாபம் சம்பாதிக்க இயற்கையை பற்றியோ, விவசாயத்தைப் பற்றியோ, அங்கு வாழும் மக்களைப் பற்றியோ தமிழக அரசோ, மத்திய அரசோ கவலைப்படவில்லை.

நடிகர் ரஜினிகாந்த் எட்டுவழிச்சாலைத் திட்டம் நல்ல திட்டம் என்று கூறுகிறார். அவர் என்றைக்காவது மக்களுடன் நெருக்கமாக இருந்து அவர்களது பிரச்சனைகளைக் கேட்டதுண்டா? சந்தித்ததுண்டா? அவர் எட்டு வழிச் சாலை அமையவுள்ள பகுதிக்குச் சென்று அந்த மக்களைச் சந்தித்துப் பேசிய பின் கருத்துக்கூற வேண்டும். களத்திற்கே வராமல் அரசியல் நடத்துவது சரியானதல்ல. கோயம்புத்தூரில் குடிநீர் விநியோகத்தை சூயஸ் என்ற தனியார் நிறுவனத்திடம் விற்றுவிட முயற்சிகள் நடைபெறுகிறது. தனியாரிடம் குடிநீரை விற்றுவிட்டால் சாதாரண ஏழை, எளிய மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவர். அவர்கள் அதிக விலை கொடுத்து தண்ணீரை வாங்க வேண்டியிருக்கும்.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் எதிர்ப்புப் பேரணியில் 13 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இந்த சம்பவத்தின் போது மாவட்ட ஆட்சியரும், மாவட்ட வருவாய் அலுவலரும் தூத்துக்குடியில் இல்லை. அவர்கள் ஜமாபந்திக்கு சென்றுவிட்டனர். 13 பேரை சுட்டுக்கொன்ற பின் இதற்கான உத்தரவை பெறுவதற்காக காவல்துறை அலைந்தது. பின்னர் துணை வட்டாட்சியர் துப்பாக்கிச்சூடு நடத்த அனுமதியளித்ததாக முன்தேதியிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையெழுத்து பெற்றது. ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூட்டிற்கு தமிழக அரசும் காவல்துறையும் தான் பொறுப்பு. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் ரீதியிலான குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இதுபோன்ற சமூகப் பிரச்சனைகளிலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தலையிட வேண்டும். பிற்படுத்தப்பட்ட, தலித் மற்றும் மலைவாழ் மக்கள் சந்திக்கும் எதிர்நோக்கும் பிரச்சனைகளிலும் தலையிட வேண்டும்.தங்களது உரிமைகளுக்காகப் போராடிய அரசு ஊழியர்களை பேருந்து பேருந்தாக ஏறி, மண்டபம் மண்டபமாக ஏறி காவல்துறை கைது செய்தது. ஆனால், பெண்களை தரக்குறைவாக சித்தரித்த நடிகர் எஸ்.வி.சேகரை மட்டும் காவல் துறை கைது செய்யவில்லை. சட்டம் அனைவருக்கும் சமம் என்றால் அவர் எப்படித் தப்பினார்? சமூக வலைதளங்களில் 12 நிமிடத்திற்கு ஒருவர் உட்புகுகின்றனர். முகநூலில் ஆறு நிமிடத்திற்கு ஒருவர் உட்புகுகின்றனர். சமூக வலை தளங்களையும், முகநூலையும் நாம் ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் அதில் பதிவிடும் கருத்துக்கள் பிறருக்கு நன்மை பயப்பதாய் இருக்கவேண்டும்.தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தினர் மக்களோடு நெருக்கமாக இருந்து தங்களது பணிகளைச் செய்யவேண்டும். தங்களது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடும் நேரத்தில் லஞ்சம்-ஊழலுக்கு எதிரான போராட்டத்தையும் தொடர்ந்து நடத்த வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப்படையாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் திகழவேண்டும்.

இவ்வாறு உ.வாசுகி பேசினார். ❖

# போராட்டப் பாதையே முன்னேற்றப் பாதை சிஐடியு அகில இந்திய துணைத் தலைவர் ஏ.கே.பத்மநாபன்

**போ**ராட்டப் பாதையே முன்னேற்றப்பாதை என்பதை தொழிலாளி வர்க்கம் பறைசாற்ற வேண்டுமென சிஐடியு அகில இந்திய துணைத் தலைவர் ஏ.கே.பத்மநாபன் கூறினார்.

மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் பங்கேற்று பேசிய அவர், தமிழகத்தில் தங்களது நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். இந்தப் போராட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பங்கு முக்கியமானது. மாநில அரசின் கொள்கைகளை எதிர்த்துப் போராடும் அதே நேரத்தில் மத்திய அரசின் தவறான கொள்கைகளை யும் எதிர்த்துப் போராட வேண்டும். வங்கி, இன்சூரன்ஸ், கிராமிய தபால் ஊழியர்கள், மின்சாரம், போக்குவரத்து ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள் என அனைவரும் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி கடுமையான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். மோடி அரசு கடந்த நான்காண்டுகளில் உழைப்பாளி மக்கள் மீது கடுமையான தாக்கு தலை நடத்தியுள்ளது. தொழிலாளர்களின் போராட்டங் களுக்கு தீர்வு காண மத்திய-மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை.மோடி அரசின் மீது நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் மீது, மக்கள் பிரதிநிதிகள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்காமல், முந்தைய ஆட்சியாளர்கள் என்ன செய்தார்கள்என மறு கேள்வி எழுப்பினர் ஆட்சியாளர்கள்.

தமிழக சட்டமன்றத்திலோ மக்கள் பிரச்சனை களைப் பற்றிப் பேசாமல் மற்ற பிரச்சனைகளைப் பற்றி பேசினார்கள்.செல்லாத நோட்டு நடவடிக் கையால் தொழில், விவசாயம் நாசமாகிவிட்டது. மக்களின் வாழ்க்கையும் மோசமாகிவிட்டது. செய்யாதுரைகளிடமிருந்து 118 கோடி, 120 கோடி ரூபாய் கருப்புப் பணம் பிடிபட்டுள்ளது. இதற்கு ஆட்சியாளர்கள் என்ன பதில் கூறப்போகிறார்கள். சரக்கு சேவை வரி மாநில அரசுகளின் நிதி யாதாரங்களையும் சிறு தொழில்களையும் அழித்ததே தவிர வேறு எதையும் செய்யவில்லை. வேலை வாய்ப்புகள் குறித்து வாய்ப்பந்தல் போட்டவர்கள். வேலையிழப்பு குறித்து கேட்டால் வாய்மூடி நிற்கிறார்கள்.

### கரைபுரண்டோடும் தனியார் பாசம்

இல்லாத வளர்ச்சி பற்றி பேச ஆதாரமற்ற விஷயங்களை அள்ளிவீசுகிறார்கள். சேலம் எஃகு ஆலையையும், துறைமுகங்களையும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு தாரைவார்க்க முயற்சிகள் நடைபெறுகின்றன. மற்றொருபுறத்தில் நம்பிக்கை யளிக்கக் கூடிய செய்திகள் கேரளாவிலிருந்து வருகின்றன. கேரளத்தில் உள்ள கருவிகள் தயாரிப்பு நிறுவனத்தை (இன்ஸ்ட்ராமென்டேஷன்) மத்திய அரசு தனியாருக்கு தாரைவார்க்க முயற்சித்தபோது, கேரள அரசு அதை விலை கொடுத்து வாங்கி, அதை மாநில பொதுத்துறை நிறுவனமாக மாற்றி பாதுகாத்துள்ளது.மேலும் இரண்டு பொதுத்துறை நிறுவனங் களை தனியாருக்குக் கொடுப்பதற்கு பதிலாக தங்களிடம் கொடுக்குமாறு கேரளஇடது ஜனநாயக முன்னணி அரசு கேட்கிறது. அதற்கு மோடி அரசோ ஏலத்தில் பங்கேற்று வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறது. மத்திய அரசிற்கு தனியார் பாசம் கரைபுரண்டோடுகிறது.இந்தச் சூழலில் தொழிற்சங்க இயக்கங்கள் தமது கடமைகளை சரியான முறையில் உணர்ந்து செயல்படவேண்டும். நமது வாழ்க்கையையும் சீரழித்து வருங்கால தலைமுறையின் எதிர்காலத்தையும் நாசமாக்கும் கொள்கைகளை அடையாளம் கண்டு அவற்றை முறியடிக்க ஊழியர்கள் ஒன்றுதிரள வேண்டும். தொழிற்சங்க இயக்கம் கொள்கை எதிர்ப்புப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள குறை பாடுகளைக் களைந்து செயல்படுவதற்கு தயாராக வேண்டும். அரசு ஊழியர் சங்கத்திற்கு இந்த விஷயத்தில் பெரும் பொறுப்பு உள்ளது. உழைப்பாளி மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் அனைத்து சக்திகளையும் முறியடித்து முன்னேற வேண்டும். வரும் நாட்கள் போராட்ட நாட்கள்.வகுப்புவாதத்தையும், சாதி வெறியையும் முறியடித்து முன்னேற, உழைப்பாளர் அமைப்புகள் முன்வரவேண்டும். இதனொரு பகுதியாக ஆகஸ்ட் 9, ஆகஸ்ட் 14, ஆகஸ்ட் 15, செப்டம்பர் 5 ஆகிய தேதிகளில் நாடு தழுவிய இயக்கங்கள் நடைபெற உள்ளன. உழைப்பாளி மக்கள் பங்கேற்க உள்ள இந்த இயக்கங்களில் அரசு ஊழியர்களும் ஒன்றிணைய வேண்டும்.தொழிலாளி வர்க்கம் தமது போராட் டத்தை வலுப்படுத்த ஒற்றுமையைக் காட்ட வேண்டும். போராட்டப் பாதையே முன்னேற்றப் பாதை என்பதை பறைசாற்றுவோம் என்றார். ❖

## துறைவாரி சங்க நிகழ்வுகள்

### MRB செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம்

***ஈரோட்டில்*** தமிழ்நாடு MRB செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்ந்த தோழர்கள் அரசு ஊழியர்



சங்கத்தில் மாவட்டத் தலைவர் ஜெ.பாஸ்கர் பாபு முன்னிலையில் இணைந்தனர். மாவட்ட பொருளாளர், மாவட்டச் செயலாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

***நாகை*** மாவட்ட மருத்துவ தேர்வாணைய (MRB) செவிலியர்கள் மேம்பாட்டு சங்க அமைப்புக் கூட்டம் 14.7.18 அன்று நாகை தமிழ்நாடு அரசு



ஊழியர் சங்கத்தில் மாவட்ட தலைவர் செல்வி. ரேவதி முத்துப்பாண்டி தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் மாநில தலைவர் க.கோபிநாதன் சிறப்புரையாற்றினார். தஞ்சாவூர் மாநில பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படி...

சம வேலைக்கு சம ஊதியம் என்ற அடிப்படையில் இதர செவிலியர்களுக்கு வழங்கப்படுவதுபோல் மருத்துவ தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்ட அனைத்து செவிலியர்களுக்கும் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து வழங்க வேண்டும். மருத்துவத் தேர்வாணையம் மூலம் பணியமர்த்தப்பட்ட நாளிலிருந்து பணி வரன் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநிலச் செயலாளர் அ.கலைசெல்வி “சங்கம் கடந்து வந்த பாதை” மற்றும் சென்னை மருத்துவத் துறை இயக்குனரகத்தில் நடைபெற்ற முற்றுகைப் போராட்ட நிகழ்வுகளை எடுத்துரைத்தார்.

வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன், சத்துணவு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் கே.ராஜூ, வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் மேகநாதன், அரசு செவிலியர் சங்க தலைவர் ப.ஜீவானந்தம், அரசு ஊழியர் சங்க நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் மற்றும் கிராம சுகாதார செவிலியர் சங்க மாநிலச் செயலாளர் பா.ராணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நிறைவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ஞா.கேத்தரின் நன்றியுரையாற்றினார்.

***நாகப்பட்டினத்தில்*** தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க வட்டப் பேரவை, அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் 14.07.18 அன்று



வட்டத் தலைவர் எம்.எம்.காதர்மொய்தீன் தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் எம்.பி.குணசேகரன் வரவேற்றார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் துவக்கவுரையாற்றினார். பல்வேறு துறைவாரி சங்க நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்தி பேசினர். வட்ட இணைச்செயலாளர் சோ.செல்வராஜ் நன்றியுரையாற்றினார்.

### ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கம்

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் 26 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை 3 முதல் மாநிலம் தழுவிய அளவில் காலவரையறையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன் ஒரு பகுதியாக



திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ஜூலை 5 அன்று கோரிக்கைகளை வலியுறுத்தி ஆரம்பத்தில் ஈடுபட்டனர்.தொடர்ந்து பணிகளுக்கு செல்லாமல் போராடினர். இந்நிலையில் ஜூலை 9 அன்று திருவள்ளூர் மீரா திரையரங்கம் அருகில் மேற்கண்ட கோரிக்கைகளுக்காக சாலை மறியலில் ஈடுபட்டனர். இதில் 300-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்று கைது செய்யப்பட்டனர்.

போராட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் அ.சந்தானம் தலைமை தாங்கினார். இதில் சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வாசுதேவன், மாவட்ட பொருளாளர் மகேந்திரன், பொறியாளர் சங்க மாநில செயலாளர் வீரமணி, தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் மணிகண்டன், அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் பாண்டுரங்கன் உள்ளிட்ட பலர் வாழ்த்தி பேசினர்.

பின்னர் அரசுடன் சங்கத்தின் மாநில நிர்வாகிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்னர் போராட்டம் தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டது.

### தமிழ்நாடு அரசு புள்ளிஇயல் சார்நிலை அலுவலர் சங்கம்

சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் 28.07.2018 திருவாரூரில் மாநில அமைப்புச் செயலாளர் ஜே.பால்ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் வி.சிவக்குமார் வரவேற்று பேசினார். பொதுச் செயலாளர் ப.அந்துவன் சேரல் கடந்த கால சங்க நடவடிக்கைகள் குறித்தும், எதிர்கால இயக்க நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக பேசினார். மாநில பொருளாளர் முனைவர் கா.பால்பாண்டி நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்தார். கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் அனைத்து மாவட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திருவாரூர் மாவட்டச் செயலாளர் வி.சோமசுந்தரம், மாவட்ட பொருளாளர் எம்.மூர்த்தி மற்றும்



பக்கிரிசாமி ஆகியோர் வாழ்த்தி பேசினர். நிறைவாக மாநில செயற்குழு உறுப்பினர் இராமமூர்த்தி நன்றி கூறினார். ❖

## பணி ஓய்வு பாராட்டு

### திண்டுக்கல்

மாவட்ட பேரவையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் முன்னாள் மாநில துணைத் தலைவர் கிருஷ்ணசாமி மற்றும் சுரேஷ்குமார் ஆகியோருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.



### திருவாரூர்

நீடாமங்கலம் வட்டக் கிளை செயலாளர் ஜீ.கௌதமன் பணி ஓய்வு பாராட்டு விழா 4.7.2018 அன்று மாவட்டத் தலைவர் ஜி.பைரவநாதன்



தலைமையில் நடைபெற்றது. ஏ.அற்புதராஜ் ரூஸ்வெல்ட் வரவேற்றார். மாநிலத் தலைவர் மு.சுப்ரமணியன், மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். துறைவாரி மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். மாவட்டச் செயலாளர் சோமசுந்தரம், மாவட்ட பொருளாளர் மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். வட்டத் தலைவர் கே.இளமாறன் நன்றி கூறினார். ❖

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

## மத்திய மாநில அரசு ஊழியர்கள், பள்ளி கல்லூரி ஆசிரியர்கள் 2018 நவம்பர் 15-ல் அகில இந்திய வேலை நிறுத்தம் தொடங்கட்டும், அலைஓசையில் ஆழிப்பேரலையின் ஒத்திகை!

2014ஆம் ஆண்டு பிரதமர் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் மக்கள் நலன், கல்வி, வேலை வாய்ப்பு, சிறுதொழில்கள், விவசாயிகள் நலன், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நலன் போன்றவற்றின் மேல் பெரிய பட்டுக் கம்பளம் போட்டு அமுக்கிவிட்டு, அதன்மீது கார்ப்பரேட் நிறுவனங்கள், ஊக வணிகம், உலகமயமாக்கல் கொள்கைகள் போன்றவற்றை வருக வருக என வரவேற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் பாரதிய ஜனதா ஆட்சி எடுத்த எல்லா நடவடிக்கைகளிலும் கடுமையாக பாதிக்கப்பட்டது, அன்றாடங்காய்ச்சிகளும், விவசாயிகளும், தொழிலாளர்களும், அரசு ஊழியர்களும், மத்திய மாநில ஆசிரியர்களும்தான். காஸ் சிலிண்டருக்கான மானியம் பெறுவதற்கு வங்கிக் கணக்கை இணைக்க கட்டாயப்படுத்தப்பட்டதிலிருந்து ஆதார் எண்ணை ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் அவசியம் என உரைத்து மக்களை அலைகழித்து, பணமதிப்பு நடவடிக்கை மூலம் பொதுமக்களை பரிதவிக்க விட்டுள்ளது மோடி அரசு. படிக்காத, பாமர மக்கள் நிறைந்துள்ள இந்நாட்டில் டீ குடிக்கக்கூட வக்கில்லாதவனிடம் டிஜிட்டல் இந்தியா போதனைகள் ஏற்படுத்தியுள்ள பலன் பூஜ்யம்தான். அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, காய்கறிகள் மீதான விலையேற்றம், பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் நாள்தோறும் நிர்ணயிக்கும் போக்கு போன்றவை மத்திய அரசின் மீது மக்களுக்கு மிகுந்த வெறுப்பைத் தோற்றுவித்துள்ளன.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக அம்மா ஆட்சி என்ற லேபில் மேல் கொள்ளைப்புறமாக கட்சி நடத்தி கொண்டிருந்த போலிகள் கல்வி, காவிரி, கலாச்சாரம், சரக்கு மற்றும் சேவை வரி, மீனவர் பிரச்சனை, மாணவர் எதிர்காலம், வேலை வாய்ப்பு என அனைத்துத் துறைகளிலும் மாநிலத்தின் உரிமைகள் அனைத்தும் மோடியின் காலடியின் கீழ் நசுக்கப்பட்டு வருகின்றன. நிதி நிர்வாகம் சீர்கெட்டுப்போய், எத்திசையில் பார்த்தாலும் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களுமாய் மக்கள் வீட்டைவிட்டு வெளியே வரத் தலைப்பட்டுவிட்டார்கள். *ஓராண்டில் தமிழகத்தில் 31,000 போராட்டங்கள் நடந்துள்ளதாக தமிழக முதல்வரே அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

மக்கள் நலன், விவசாயம், அரசுப்பணி, சிறு குறுதொழில் வளர்ச்சி, ஆசிரியப்பணி கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை அரசுக்கு லாபம் தராத தொழில்களாக பார்க்கப்பட்டு அவைகள் ஒன்று கைவிடப்பட்டு வருகின்றன அல்லது தனியார்களுக்கு தாரை வார்க்கப்படுகின்ற நிலைமை தலையெடுக்க ஆரம்பித்துவிட்டன. அடுத்த வேளை சோற்றுக்கு வழிதெரியாமல் வறுமைக்குள் மூழ்கிக்கொண்டிருக்கும் மக்களின் பசிக்கு வழி தேடாமல் எட்டுவழிச் சாலை அமைப்பதில் தமிழக அரசு மும்முரம் காட்டி வருவதும், அந்த திட்டத்தை எதிர்த்து தட்டிக்கேட்பவர்களை தேச துரோகிகளைப் போல் கைது செய்வதும், போராடுபவர்களை போர்க்குற்றவாளிகளாக பார்ப்பதும், மறுத்துப் பேசுபவர்கள் மாவோயிஸ்டுகள் என்று பிரகடனப்படுத்தப்படுவதும், கருத்துக் கூறுபவர்கள் கலவரக்காரர்கள் என முத்திரை குத்தப்படுவதும் அரசியல் சாசன சட்டம் அமைத்துக் கொடுத்துள்ள போராடும் உரிமையை தட்டிப் பறிக்கும் ஆட்சியாளர்களின் செய்கைகளை நீதிமன்றங்கள் வேடிக்கை பார்ப்பதும்... பொதுமக்களையும் இளைஞர்களையும் வெறுப்படையச் செய்து, ஜனநாயகத்தின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையின் அஸ்திவாரத்தை ஆட்டம் காண வைத்திருக்கிறது.

தமிழகத்தில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை பொறுத்த வரையில், சென்ற ஊதிய மாற்றத்தின் போது முரண்பாடுகளுக்கு மேல் முரண்பாடுகளை ஏற்படுத்தி அலைகழித்த அதிகார வர்க்கமும், அரசாங்கமும் எட்டாவது ஊதிய மாற்றதிலும், புதிய பென்சன் திட்டத்தை கைவிடுதல், சிறப்பு

காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியத்தை வழங்குதல், தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களை ஒழித்துக்கட்டுதல், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான படிகள் போன்ற கோரிக்கைகள் எதையும் பரிசீலிக்காமல் அறிவித்திருப்பதும், மேலும் 1.1.2016ம் தேதி முதல் வழங்கப்பட வேண்டிய 21 மாத நிலுவைத் தொகையை வழங்க மறுத்திருப்பதும் எல்லா அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியிலும் கொதிப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில், மக்கள் விரோத, ஊழியர் விரோத, மற்றும் தொழிலாளர் விரோத கொள்கைகளை அமலாக்கத் துடிக்கும் மத்திய மாநில அரசுகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும், பறிக்கப்பட்டுள்ள, தடுக்கப்பட்டுள்ள, மறுக்கப்பட்டுள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகளுக்காக தேசம் தழுவிய போராட்டங்களைத் திட்டமிட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தில் 16வது அகில இந்திய சென்னை மாநாட்டில் இதற்காக கீழ்க்கண்ட தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

1. **விலைவாசியை கட்டுப்படுத்தி அனைவருக்குமான பொது விநியோக திட்டத்தை கொண்டுவர வேண்டும்.**
2. **வகுப்புவாதத்தை நிறுத்தி மதச்சார்பின்மையை பாதுகாக்க வேண்டும்.**
3. **தொழிலாளர் விரோத கொள்கைகளையும், திருத்தங்களையும் உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.**
4 **அடிப்படை தொழிற்சங்க உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான போராட்டங்களை வலுப்படுத்த வேண்டும்.**
5. **ஆளும் வர்க்கத்திற்கு தீண்டாமை அதிகாரம் அளிக்கும் அரசமைப்பு விதிகளை ரத்து செய்ய வேண்டும்.**
6. **பிஎப்ஆர்டிஏ சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். தேசிய ஓய்வுதியத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். வரையறுக்கப்பட்ட, பலன்தரும் ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும்.**
7. **அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை அமர்த்துதல், ஒப்பந்த மற்றும் தினக்கூலி வேலை முறை போன்றவற்றை ரத்து செய்ய வேண்டும்.**
8. **விஞ்ஞான மற்றும் சமத்துவ முறையில் வருமான வரியை மறு கட்டமைப்பு செய்ய வேண்டும்.**
9. **ஊதிய மாற்றத்தை 1.1.2016 முதல் கணக்கிட்டு நிலுவைத் தொகையை உடனடியாக வழங்கிட வேண்டும்.**
10. **அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும். தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்.**

மேற்கண்ட கோரிக்கைகளுக்காக பல்வேறு தொழிற்சங்கங்களை அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் ஒன்றிணைத்து 15.11.2018ம்ஆம் தேதி அகில இந்திய அளவில் ஒரு நாள் வேலை நிறுத்தம் நடத்திட முடிவு செய்துள்ளது.

மேற்படி ஒருநாள் வேலை நிறுத்தத்திற்காக விரிவான ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த அகில இந்திய வேலை நிறுத்தம் பற்றிய விளக்கமும் அவசியமும் இந்தியா முழுவதிலும் அரசுத் துறைகளில் மற்றும் கல்வித் துறைகளில் வேலைபார்க்கும் ஒவ்வொரு ஊழியருக்கும் சென்று சேர மாநில மாவட்ட வட்ட அளவிலான கருத்தரங்கங்களை 15.08.2018க்குள்ளும், அலுவலகம் மற்றும் நிறுவனங்கள் வாயிலான பிரச்சாரங்களை 31.8.2018க்குள்ளும் செய்து முடிக்க வேண்டும் என்றும் வேலைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

- ☞ **5.9.2018ஆம் தேதி புதுதில்லி நாடாளுமன்றம் நோக்கி பெரும் பேரணியை அனைத்து தொழிற்சங்கங்களும் இந்தியா முழுவதிலும் உள்ள அரசு ஊழியர் ஆசிரியர் இயக்கங்களும் ஒன்றிணைந்து நடத்துவது என்றும்**
- ☛ **15.09.2018 முதல் 25.09.2018 வரை அனைத்து மாநிலங்களிலும் கோட்ட, மண்டல, மாவட்ட அளவிலான வாகன பரப்புரையை அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் நிர்வாகிகள் மேற்கொள்வார்கள் என்றும்,**
- ☛ **1.11.2018 முதல் அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள், அரசு மற்றும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் அலுவலகத்தில் அவர்தம் இருக்கைக்குச் சென்று இந்த வேலை நிறுத்தத்தின் அவசியத்தையும் அவசரத்தையும் எடுத்துரைத்து ஒவ்வொரு ஊழியரும் 15.11.2018ம் தேதி நடக்க உள்ள ஒருநாள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் முடிவாற்றப்பட்டுள்ளது.**

தமிழகத்தைப் பொறுத்தவரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்புடன் சேர்ந்தும் மற்ற பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள சங்கங்களையும் இணைத்துக் கொண்டும் இந்த மாபெரும் அகில இந்திய ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி நமக்கான உரிமைகளை தக்க வைக்க சூளுரைப்போம் **என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில பிரதிநிதித்துவப் பேரவை தமிழகத்தில் உள்ள மத்திய, மாநில அரசு ஊழியர்களை, பள்ளிக்கல்லூரி ஆசிரியர்களை அறைகூவி அழைக்கின்றது.**

**கடற்கரையில் வீசும் காற்று சுமந்து வரும் அலைஓசை,**
**ஆழிப்பேரலையின் ஓசையாக மாறுவதற்கான ஒத்திகை**
**இங்கிருந்தே தொடங்கட்டும்; அது இமயம் வரை தெறிக்கட்டும்!**
**உரிமை கீதம் ஒலிக்கட்டும். அதை உலகம் கண்டு வியக்கட்டும்!**

**மதுரையில் 2018 ஜுலை 21, 22 தேதிகளில் நடைபெற்ற**
**மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட கோரிக்கை தீர்மானங்கள்**

**எண்.**

1. **புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோருதல்**
2. **சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழுங்க வலியுறுத்தல்**
3. **21 மாத கால ஊதிய நிலுவைத் தொகையை வழங்கிட வலியுறுத்தல்**
4. **மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியமும், படிகளும் வழங்கக் கோருதல்**
5. **தொழில்நுட்ப ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி களையப்பட வேண்டும்**
6. **அமைச்சுப் பணியாளர்களின் ஊதிய மாற்றத்தை ஒழுங்கமைக்கக் கோருதல்**
7. **சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக வரன்முறைப்படுத்தல்**
8. **காலிப் பணியிடங்களை நிரப்பிடுதல்**
9. **பணிநீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களை மீளப் பணியமர்த்தம் செய்யக் கோருதல்**
10. **கருவூல கணக்குத் துறையை டிஜிட்டல்மயமாக்கும் தமிழக அரசின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவிப்பது**

### கண்டனத் தீர்மானங்கள்

1. அரசு ஊழியர்களின் ஊதிய மாற்றத்திற்கு அரசின் வரி வருவாயில் செலவிடுவது குறித்து தவறான தகவல் கூறிய அமைச்சருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடும் கண்டனம்
2. நடுநிலை தவறி எழுதிய நயவஞ்சக ஐஏஎஸ் அதிகாரிக்கு (ஓய்வு) அரசு ஊழியர் சங்கம் கண்டனம்
3 அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் சம்பளத்தை குறைக்கச் சொன்ன எம்எல்ஏ தனியரசுக்கு கண்டனம்

### தனித் தீர்மானம்

1. அரசாணை எண். 56-ஐ ரத்து செய்து பணியாளர் சீரமைப்புக் குழுவை கலைக்க வேண்டும்

### பொது தீர்மானங்கள்

1. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களாக பணியாற்றும் ஏ மற்றும் பி பிரிவினருக்கு நிறுத்தப்பட்ட கருணைத் தொகையை வழங்கக் கோருதல்
2. நாளது வரை சரிசெய்யப்படாமல் இருக்கும் ஊதிய முரண்பாடுகளை சரிசெய்ய வலியுறுத்தல்
3. மத்திய அரசுக்கு இணையாக குறைந்தபட்ச அடிப்படை ஊதியமும், ஓய்வூதியமும் வழங்க வலியுறுத்தல்
4. சங்கம், கழகம், திட்டம் என்ற பெயரிலான அத்துக்கூலி முறையை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வலியுறுத்தல்
5. ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதி கலையப்பட வேண்டும்
6. மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக்க வலியுறுத்தல்
7. வேலை நிறுத்தக் காலத்தை பணிக்காலமாக அறிவிக்கக் கோருதல்
8. அரசு ஊழியர் குடியிருப்புகளை பழுது நீக்கிடவும், புதிய குடியிருப்புகளை உருவாக்கிடவும் கோருதல்
9. கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்கிடக் கோருதல்
10. தரம் உயர்த்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சி பகுதிகளுக்கு மேம்படுத்தப்பட்ட வீட்டு வாடகைப்படி வழங்கிடக் கோருதல்
11. மருத்துவக் காப்பீட்டு திட்டத்தை அரசு ஏற்று நடத்தவும், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களையும் இத்திட்டத்தில் சேர்த்திடக் கோருதல்
12. பட்டப்படிப்பு முடித்த இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுக்கு இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்கக் கோருதல்
13. விசாகா கமிட்டியை மாவட்டந்தோறும் அமைக்கக் கோருதல்
14. காலத்திற்கு ஒவ்வாத அரசு ஊழியர் நடத்தை விதிகளை ரத்து செய்ய வலியுறுத்தல்
15. நிர்வாகத் தீர்ப்பாயம் அமைக்கக் கோருதல்
16. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு அங்கீகாரம் கோருதல்
17. குடும்பப் பாதுகாப்புநிதியை ரூ. 10 லட்சமாக உயர்த்தி வழங்கிடக் கோருதல்
18. காவல் துறையால் தொடுக்கப்பட்ட வழக்குகளை ரத்து செய்யக் கோருதல் ❖

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

## மாநிலப் பிரதிநிதித்துவப் பேரவை, மதுரை - 2018 ஜூலை 21-22

## பிரதிநிதி விவரத் தொகுப்பு

1. கலந்து கொண்டுள்ள மாவட்டங்கள் **33**
2. பங்கேற்றவர்கள் **605**
2. படிவம் தந்தவர்கள் ஆண்கள் - **500** பெண்கள் - **91** மொத்தம் **591**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3. | வயது விபரம் | **26-35** | **36-45** | **46-55** | **56-60** | | |
| | எண்ணிக்கை | **33** | **‘153** | **311** | **94** | | |
| 4. | கல்வித் தகுதி | **பட்டப் மேற்படிப்பு** | **பட்டப் படிப்பு** | **பட்டயப் படிப்பு** | **ஐடிஐ** | **SSLC** | **HSC** |
| | எண்ணிக்கை | **181** | **81** | **92** | **23** | **181** | **81** |

5. அரசு ஊழியர் சங்கத்தில் வகிக்கும் பதவி

   **மாநிலம்-15 மாவட்டம்-230 வட்டக் கிளை - 278**

6. துறைச் சங்கத்தில் வகிக்கும் பதவி

   **மாநிலம் - 172 மாவட்டம் - 250 வட்டம் - 60 ஒன்றியம் 19**

7. சங்க நடவடிக்கையால் போராட்டத்தில் கலந்து கொண்டு **பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் - 206**

   **சிறை சென்றவர்கள் - 195 மறியலில் பங்கேற்றோர் - 586**

8. அரசு ஊழியர் சந்தா 576
9. எம்ப்ளாயீஸ் பாரம் 367
10. இரத்த தானம் செய்தவர்கள் 309
11. உடல் உறுப்பு தானம் செய்ய விருப்புரிமை 2
12. உடல் தானம் செய்ய விருப்புரிமை 13
13. கண் தானம் செய்ய விருப்புரிமை 56
14. காலமுறை ஊதியம் பெறுபவர்கள் 468
15. சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்கள் 118
16. தொகுப்பூதியம் 5
17. பழைய பென்சன் திட்டம் 350
18. புதிய பென்சன் திட்டம் 151
19. சிறப்பு ஓய்வூதியம் பெறுபவர் 90

**கலந்து கொண்டவர்களில் வயதில் மிகவும் இளையவர்கள்**

1. **ஆதி.சிவா,** வணிக வரித்துறை, தேனி மாவட்டம் *(30.04.2050)*
2. **செ.முரளி,** ஊரக வளர்ச்சி, திருவண்ணாமலை *(31.05.2048)*
3. **பொ.முனியேஸ்வரன்,** கல்வித் துறை, இராமநாதபுரம் *(30.04.2048)*
4. **ப.சரவணகுமார்,** கல்வித் துறை, இராமநாதபுரம் *(30.04.2048)*

**சிறப்பு காலமுறை ஊதியம்**

1. **ப.மணிகண்டன்,** சத்துணவு அமைப்பாளர், திருவள்ளூர் *(30.06.2050)*

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com